Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-888)

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஸபர் 29 (02.05.2003) வெள்ளிக்கிழமை இதழ் : 211





தமிழ்த் தேசியத்தின் கூட்டு மே நாள் விழாவில் - தேசியத் தலைவரது உருவத்தைத் தாங்கிய ஊர்தி முன்செல்வதை முதலாவது படத்திலும், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஊர்தி ஒன்றை இரண்டாவது படத்திலும், பங்கேற்ற பெரும் மக்கள் திரளின் ஒரு பகுதியினர் தேசியத் தலைவரின் உருவப்படங்களைத் தாங்கியவாறு பேரணியாகச் செல்வதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற மே தின நிகழ்வு!

## கொட்டும் மழையிலும் திரண்டனர் மக்கள்

(லிவிங்ஸ்டன், ராஜ்குமார், சுதர்சன்)

**யாழ். குடாநாட்டில் - தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் அரசியற் கட்சிகளும், கூட்டுறவாளர்களும், பல்வேறு தொழிற்சங்கங்களும், பொது அமைப்புக்களும், மாணவர்களும் இணைந்து தமிழ்த் தேசியத்தின் கூட்டு மே நாளை நேற்று பெரும் எழுச்சியுடன் கொண்டாடினர்.**

யாழ். குடாநாட்டின் - தென்மராட்சி, வடமராட்சி, வலி. வடக்கு, வலி.கிழக்கு, தீவகம், யாழ்.நகரம் ஆகிய பிரதேசங்களிலிருந்து ஊர்திப் பவனியாகவும் பேரணியாகவும் திரண்டுவந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் - பெரும் எழுச்சியுடன் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் பிற்பகல் 2.30 மணியளவில் ஒன்று சேர்ந்தனர்.

மே தினப் பேரணி, பிற்பகல் 3 மணியளவில் தீயாக தீபம் திலீபனின் தூபிக்கு அருகாமையிலிருந்து ஆரம்பமாகி, பருத்தித்துறை வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை வந்தடைந்தது. பின்னர், அங்கிருந்து மணிக்கூட்டு வீதிவழியாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தைச் சென்றடைந்தது.

இப்பேரணியில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனம் முன்செல்ல அதன் பின்னால் இந்து, கிறிஸ்தவ,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஒன்றுதிரண்ட வெளிப்பாடு வெற்றியை உறுதிசெய்கிறது

## மே தினக் கூட்டத்தில் இளம்பரிதி



இன்றைய தினத்திலே தமிழ்த் தேசியத்தின் கீழான ஒற்றுமையும், ஒரே தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டு நிற்கின்ற வெளிப்பாடும் - நிச்சயமாக எங்கள் போராட்டம் வெற்றிபெற்றே தீருமென்பதை உறுதியாக்குகின்றதென, நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மே தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இனவாத யுத்தம் மூலமே மக்கள் வாழ்வு சிதைந்தது

## மகளிர் அரசியற் பொறுப்பாளர் தமிழினி

உலகத்தையே ஒரு புதிய வடிவமாக மாற்றியமைத்த வலிமை பொருந்திய கரங்களுக்குச் சொந்தக்காரர்கள் தொழிலாளர்கள். இந்த உலகின் பெரும்பான்மையான தொகையிலும், பெரிய வலிமையான சக்தியாகவும் விளங்கிக்கொண்டிருப்பவர்களும் தொழிலாளர்களே. அவர்களுடைய வலிமை, அவர்களுடைய உழைப்பு, அவர்களின் இரத்தம், கண்ணீர், வியர்வை எல்லாம்தான் - இன்றைய நவீன உலகின் வடிவமாக மிளிர்ந்துகொண்டிருக்கின்றது

- இவ்வாறு மகளிர் அரசியற்



துறைப் பொறுப்பாளர் தமிழினி மே தின உரையில் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# எங்கள் தலைவன் பிரபாகரனே; ஒரே தலைமையே தமிழினத்திற்கு!

## ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா மே தின விழாவில் பெருமிதம்

எமது தமிழினத்தைப் பொறுத்தமட்டில், எங்களுடைய தலைவர் தம்பி பிரபாகரன்தான். எங்களுடைய இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான். எமது இனம் ஒட்டுமொத்தமாக ஒரே கொடியின் கீழ், ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டிருக்கிறது என ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியத்தின் கூட்டு மே தின விழாவில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசும்போது தெரிவித்ததாவது -

இந்த நாட்டிலே 5000 நூற்றாண்டுகளுக்கு முன்பான நீண்ட நெடிய



வரலாற்றைக் கொண்டிருக்கின்ற எங்களுடைய இனம், சர்வதேச தொழிலாளர் தினத்தை இன்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றதென்றால், அதற்கான அடிப்படைக் காரணம் விடுதலைப் புலிகள்தான். இந்த மண்ணின் விடுதலைக்காக, எமது தேசத்தின் விடுதலைக்காக உழைக்கின்றவர்கள் இருக்கின்ற பொன்னான மண்ணிலே நாம் இன்று வாழக் கிடைத்திருக்கிறது.

எமது இனம் ஒட்டுமொத்தமாக ஒரே கொடியின் கீழ், ஒரே தலைமைத்துவத்தின் கீழ், ஒரே தலைமையின் கீழ் ஒன்றுபட்டிருக்கின்றது. எங்களுடைய

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அமைதி வந்தாலும் ரவுணை பிரியமாட்டமெண்டுதான் நிக்கினம்!

# படைமுகாமின் புதிய இடமாற்றம் உடன்படிக்கையை மீறுகின்றது!

## பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்

யாழ். நகரின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள படைமுகாம்களை இடம்மாற்றுவது தொடர்பாக அரசாங்கம் தெரிவித்த புதிய திட்டமானது, பழைய சிபார்சுகளிலிருந்து எவ்விதமான ஆக்கபூர்வமான மாற்றத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதைக் கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறோமென - தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்.நகரின் மத்தியிலுள்ள இராணுவத் தளத்தை கோட்டைக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் மாற்றுவது பற்றி அரசாங்கத்தால் பிரேரிக்கப்பட்ட புதிய திட்டத்தை ஆட்சேபித்தே இக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

நேற்று அனுப்பிவைக்கப்பட்ட இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எமக்கு அனுப்பிவைக்கப்பட்ட தங்கள் கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்த படைத்தள மீள அமைப்புக்கான அமைவிடமானது - தீவகத்துக்கான நுழைவாயிலாக விளங்கும் யாழ். பண்ணை (10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் தன்னாட்சி உருவாகும்போதே நிரந்தர சமாதானம் இத்தீவில் ஏற்படும்!

## தமிழ்த் தேசத்தின் கூட்டு மேநாள் பிரகடனம் சர்வதேசத்துக்கும் அறைகூவல்

தமிழ்த் தேசிய மக்களால் ஒருங்கிணைக்கப்பட்டு முன்னெடுக்கப்படும் அனைத்துத் தொழிலாளார் நாளாகிய இன்று, இலங்கைத் தீவில் சிங்கள தேசத்தின் பேரினவாத ஆட்சிகளின் ஆக்கிரமிப்பில் அழுந்திக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்று, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தன்னாட்சி பேணப்படும்போதுதான் நிரந்தர சமாதானம் உருவாகும் என்ற எமது அரசியல் அபிலாஷையை ஸ்ரீலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இந்த மே நாள் எழுச்சிப் பேரணியூடாக எமது மே நாள் பிரகடனத்தை வெளியிடுகின்றோம் என தமிழ்த் தேசிய இனத்தின் கூட்டு மே நாளில் இணைந்து கொண்ட அரசியற் கட்சிகளும், தொழிற்சங்கங்களும், மாணவர் அமைப்புக்களும் நேற்று விடுத்த பிரகடனத்தில் தெரிவித்தன.

அப்பிரகடனம் முழுமையாக வருமாறு -

01. பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான, தமிழ்த் தேசிய ஒருங்கிணைந்த செயலாற்றல்மிக்க ஓங்கு கரங்களாக உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளையும், அதன் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களையும் எமது ஒரே தேசியத் தலைமையாகக் கொண்டிருப்பதில் நாம் உறுதிபூண்டுள்ளோம்.

02. தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்த் தேசிய இனத்தின் ஏக பிரதிநிதிகள் என்றும், நிரந்தர சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமே சிறிலங்கா அரசு பேச வேண்டுமென்றும் கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் கொடுத்த ஆணையை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

03. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து மேற்கொள்ளப்படும் எந்தப் பேச்சுவார்த்தை அரங்கும் - எக்காரணம் கூறப்பட்டாலும் - தமிழ்த் தேசிய இனத்தைப் பேச்சுவார்த்தைக் களத்திலிருந்து புறந்தள்ளும் உள்நோக்கம் கொண்டவையாக அமையும்.

04. 22.2.2002 இல் சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்தத்திற்கானதும், தமிழ்மக்கள் இயல்புவாழ்க்கையை நிலைநிறுத்துவதற்குமான புரிந்துணர்வு உடன்படிக்கை, விரைவாகவும், முழுமையாகவும் நிறைவேற்றப்பட வேண்டும்.

05. தமிழர் தாயகத்தில் நிரந்தரமான சமாதானமும், இயல்புவாழ்வும் ஏற்படவேண்டுமானால், நிலவன்பறிப்பு இராணுவம், முற்றுமுழுதாக மக்கள் வாழ்விடங்களிலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டும்.

06. சிறிலங்கா ஆயுதப்படைகளின் நிலவன்பறிப்புக் காரணமாக தமது சொந்த வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, அகதிமுகாம்களில் அகதிவாழ்வு வாழும் தமிழ்மக்கள் - தமது வாழ்விடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு தொழில், உடல்நலம், கல்வி, வழிபாட்டு உரிமைகளை இராணுவ நெருக்குதல்களின்றி அனுபவிப்பதற்கான சமூகப் பொருண்மியக் கட்டுமானங்கள் உடனடியாகக் கட்டியெழுப்ப வழிசெய்யப்பட வேண்டும்.

07. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின கீழ் கைதுசெய்யப்பட்டு, சிறிலங்கா சிறைக்கூடங்களில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும். இதுபோன்ற கைதுகள் எதிர்காலத்தில் நிகழாதிருப்பதற்காக கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமெனக் கோருகின்றோம்.

08. பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தின் முழுமையான புனர்நிர்மாணமும் அபிவிருத்தியும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். இது குறித்த சிறிலங்கா அரசின் அசமந்தப்போக்கு, நீக்கப்பட்டு, சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு முழுமை பெறவேண்டும்.

09. பிரதேச வேறுபாடின்றி கல்வியில் சமவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு தமிழர் வாழும் பிரதேசங்களில் கல்வி முன்னேற்றத்திற்கான தடைகள் அகற்றப்பட வேண்டும். கல்வி முன்னேற்றத்திற்கான வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்பதுடன் கிராமப்புற, பின்தங்கிய கல்விக்கூடங்களின் வளங்களை மேம்படுத்த முன்னுரிமை வழங்கவேண்டும். உயர் கல்வி மற்றும் கல்விக்கூடங்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகளும், கல்வியின் பின்னடைவுக்கான காரணங்களும் கண்டறியப்பட்டுத் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். ஆசிரிய வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டுமென்பதுடன் அறிவியல், தொழில்நுட்பம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்ப வளங்கள் தமிழர் தேசத்துக் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் சமமாக வழங்கப்படுதலும் வேண்டும். பாடங்கள் தயாரித்தல், அச்சிடுதல், வழங்கல் உட்பட தமிழ்த் தேசக்கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் தமிழ்க் கல்விமான் திட்டக்குழுவிடம் விடப்படுதல் வேண்டும்.

10. தமது கடுமையான உழைப்பின் மூலம் தேசத்திற்கான செல்வங்களைப் படைத்திட்ட தொழிலாளர்கள் சிறிலங்கா படைகளின் கொடூரமிக்க செயற்பாடுகள் காரணமாக தமது தொழில்வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இன்னலுற்றுத் தவிக்கும் இவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதுடன் வேலைவாய்ப்புக்களும் வழங்கப்பட்ட வேண்டும். அத்துடன், புதிய வேலைவாய்ப்புக்களுக்குமான ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

11. மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில், புதிய இராணுவ முகாம்கள், குறிப்பாக யாழ். கோட்டையில் முகாம் ஏற்கனவே சீரழிவுக்குள்ளாக்கப்பட்ட மக்களது இயல்பு வாழ்நிலையை மேலும் பாதிப்படையச் செய்துவிடும். எனவே, இச்செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

கடந்த காலத்தில் சமாதானத்துக்கான முன்னெடுப்புக்கள் யாவுமே சிறிலங்கா பேரினவாதத்தால் தடைப்பட்டமையை வரலாற்றுப்பட்டறிவாக நாம் கண்டுள்ளோம். இதுவே தொடர்கதையாகிவிடுவதை இனிமேல் நாம் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறோம். இன்றைய மே நாளில் எம்மால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை மனச்சுத்தியுடன் சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்துவதன் மூலமே இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானமும், இயல்புவாழ்வும் ஏற்படும் என்பதை ஒன்றிணைந்த குரலில் கூறிநிற்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறந்த ஊர்திகள் தெரிவில் பரிசு பெற்றோர்



மே தின விழாவில் பங்கேற்ற ஊர்திகளில் சிறந்த ஊர்தியை உருவாக்கி, முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட புங்குடுதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கான பரிசினை கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா வழங்கினார்.



இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்ட துறையூர் கடற்றொழிலாளர் சங்கத்துக்கான பரிசினை யாழ். மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமையவன், சங்கப் பிரதிநிதிக்கு வழங்கினார்.



மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்ட சுனாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கான பரிசினை மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழினி வழங்கினார். (படங்கள் ஏவ்.எக்ஸ். சுதர்சன், ராஜ்குமார்.)

## எங்கள் தலைவன் பிரபாகரனே...

அங்கீகரிக்கப்பட்டுள்ளதன்படி - இன்று பேச்சுவார்த்தை மேசையில் தமது நிலைப்பாட்டை தமிழினம் முன்வைத்திருக்கின்றது. இலங்கை என்ற வரையறைக்குள் - எங்களுடைய மண்ணில், எங்களுடைய ஜீவ பூமியில், எங்கள் முன்னோர் வாழ்ந்த எமது சொந்த நிலத்தில் - நாங்கள் அனுபவிக்கக்கூடிய அதிகாரத்தை அரசியல் ஏற்பாட்டிலே சிங்கள தேசம் முன்வைக்க முடியுமாகவிருந்தால் அதைப் பரிசீலிக்க தமிழினம் தயாராக இருக்கிறது.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ தமிழினத்திலே செல்லாக்காசாக இருக்கின்ற சில அரசியல் குப்பைகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார். சந்திரிகா அம்மையார் சிங்கள இனவெறிக் கும்பல்களுடன், இன வெறியர்களோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பேச்சுவார்த்தையை உடைத்து மீண்டும் ஒரு யுத்தத்தை தமிழினத்தின் மீது திணிப்பதாகவே சந்திரிகா அம்மையார் நடந்துகொண்டிருக்கிறார்.

மீண்டுமொரு யுத்தம் தமிழினத்தின் மீது திணிக்கப்படுமாகவிருந்தால் - தமிழினத்தோடு அரசியல் பேசிக்கொண்டிருக்கமுடியாது. தமிழினத்தோடு தொடர்ந்து ஜனநாயகம் பற்றிப் பேசிக்கொண்டிருக்க முடியாது. சர்வதேசம்கூட போராட்டத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்க முடியாது. ஒட்டுமொத்தமாக திடகாத்திரமான அத்தனை ஆண்களும், பெண்களும் வயது வித்தியாசமின்றி ஆயுதம் ஏந்தவேண்டிய நிலைமையை சிங்கள தேசம் நிச்சயமாகச் சந்திக்கவேண்டிவரும்.

எதனைத் தீர்மானிப்பது என்ற வரலாற்றுத் திருப்புமுனையிலே நாம் நின்றுகொண்டிருக்கிறோம். எமது முன்னைய வரலாற்றைத் திரும்பிப்பார்க்கவேண்டும். இந்த மண்ணிலே இனிமேல் கிருஷாந்திகள், கோணேஸ்வரிகள், சாரதாம்பாள்கள், கண்ணீர்சிந்த சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகின்ற அவலநிலை எமது மண்ணிலே இருக்கமுடியாது என நாங்கள் உலகிற்கு எடுத்துச்சொல்ல வேண்டிய நேரமிது.

முழு உலகத்தையும், தனியரசாக ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்ற அமெரிக்க ஏகாதிபத்தியம் பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத்தை விலக்கி, அங்கு பிரதமராக வேறொருவரை நிறுத்தி, சமாந்தரமான அரசியல் அதிகாரபீடத்தை உருவாக்குவதன் மூலம், பலஸ்தீனத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்த முனைகிறது.

இந்த நிலை, ஈழத்திலே நடைபெற நாம் அனுமதிக்கமாட்டோம். ஈழத்தைப் பொறுத்தமட்டிலே எங்களுடைய தலைவன் தம்பி பிரபாகரன்தான். எங்களுடைய இயக்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்தான்.

எங்களுடைய இலட்சியம் தேச விடுதலை என தமிழினம் உறுதியாக இருக்கின்ற வரையிலே எங்களை யாரும் அசைக்கமுடியாது.

எந்த யாழ். கோட்டையிலிருந்து இராணுவம் விரட்டியடிக்கப்பட்டதோ, அந்த கோட்டையின் மேற்குபுறத்திலே இராணுவமுகாம் மீண்டும் அமைக்கப்படுவதாக இன்று அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. இது தமிழினத்தின் சுயாதிக்கத்திற்கு விடப்படுகின்ற சவால்.

எங்கள் மண்ணிலே அந்நியருக்கு இடமில்லை. அந்நியப் படைகளுக்கு இடமில்லை. எங்கள் மண்ணிலே சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு இடமில்லை. இந்த மாகாணத்திலே, யாழ். மண்ணிலே, யாழ் நகரத்தின் எந்தவொரு சதுர அடி மண்ணிலும் இராணுவம் நிலைகொள்ள முடியாது. இதனை சிங்கள அரசுக்கும், ஜனாதிபதிக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.

நாங்கள் உறுதியாக இருக்கின்ற வரை, எமது இலட்சியத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கின்றவரை, எங்களை யாரும் அசைக்க முடியாது.

இந்த போராட்டத்திற்கான முடிவு எங்களுக்கான விடிவு. இந்த போராட்டத்தை எமது எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க முடியாது. எங்கள் மண்ணிலே சுதந்திரக்காற்றை சுவாசிக்கின்ற அந்த நன்நாளை நாம் சந்தித்தாகவேண்டும்.

இந்த உறுதியோடு தமிழினம் ஒரேகொடியின்கீழ் ஒட்டுமொத்தமாக அணிதிரளவேண்டும். முதலிலே எமது இலட்சியம் விடுதலையே. இது எங்களுடைய சொந்த மண். அன்று அனுராதபுரத்திலே புலிக்கொடி பறந்தது. இன்று எம்மண்ணிலே தேசியக் கொடியாக புலிக்கொடி பறக்கிறது.

இது விடுதலையைப் பெறுவதற்கான திருப்புமுனை. இது இறுதிக் கட்டம். நாங்கள் ஒன்றுபட்டு இந்த நேரத்திலே இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்ததார்.

(சு,லி,ரா)

## துருக்கியில் பாரிய பூமியதிர்ச்சி; நூற்றுக்கதிக சிறுவர் கோரப் பலி!

### கட்டட இடிபாடுகளுக்குள் மேலும் பலர் சிக்கினர்



துருக்கி நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சியில், நூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் உட்பட 150 பேர் கோரமாகப் பலியாகினர்.

பின்கொங் நகரில் ஏற்பட்ட இப் பூமியதிர்ச்சியில் - நகரில் அமைந்திருந்த பாடசாலையொன்று, முற்றாகத் தகர்ந்து வீழ்ந்ததில் - இடிபாடுகளுக்குள் சிக்கியதிலேயே பாடசாலை மாணவர்கள் பரிதாபமாகப் பலியாகினர்.

இதேவேளை - மாணவர்கள் தங்கியிருந்த நான்கு மாடிக்கட்டட விடுதி ஒன்றும் பூமியதிர்ச்சிக்கு ஆளாகி இடிந்து வீழ்ந்ததில் - நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் சிக்குண்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி மிகவும் பின்தங்கிய பிரதேசமென்பதால் - சரியான தகவல்கள் வெளிவராத பட்சத்தில் - கொல்லப்பட்டோரின் தொகை இன்னமும் அதிகமாயிருக்கும் எனவும் அஞ்சப்படுகிறது.

தமது பிள்ளைகள் கொல்லப்பட்டதான, கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிவிட்டதான செய்தியை அறிந்த மாணவர்களின் பெற்றோர்கள் அழுது புலம்பிய காட்சி மனதை உருக்குவதாய் இருந்ததாக, மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

# கடற்பகுதி மோதல் தவிர்ப்பு விவகாரம்; அரசு - புலிகளுடன் ரெலவ்சன் ஆராய்வார்!


ரெலவ்சன்

கடற்பகுதி மோதல்களைத் தவிர்ப்பது தொடர்பான விவகாரங்கள் குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன் இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று கொழும்பில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில்- கடல் மோதல் தவிர்ப்பு வழிமுறைகள் தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட இரண்டாவது தகவல் அறிக்கை குறித்து விரிவாகப் பேச்சு நடத்தப்படவுள்ளது.

கடந்தவாரம் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இந்த இரண்டாவது தகவல் அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. இந்த சிபார்சுகள் அடங்கிய தகவல் அறிக்கைக்கான பதிலைக் கடந்த 30 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு இருதரப்பிடமும் கண்காணிப்புக்குழு கேட்டிருந்தது.

ஆனால், இதற்கான பதில் இருதரப்பினாலும் இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்தநிலையில் அரச மற்றும் புலிகள் தரப்புக்களுடன் கடல் மோதல் தவிர்ப்பு வழிமுறைகள் குறித்து ஆராயக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் பேச்சுக்களை நடத்தவுள்ள ஜெனரல் ரெலவ்சன், நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வன்னிக்கும் செல்லவுள்ளார்.


ஒஸ்ரின்

அங்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவார் எனவும் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜெனரல் ரெலவ்சன், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்து படையதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும், உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளைப் பார்வையிட்டதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வருகிறார்

கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள புற்றுநோய் வைத்திய நிபுணர் எதிர்வரும் 6, 7 ஆம் திகதிகளில் தெல்லிப்பளையில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சைநிலையத்தில் சிகிச்சை வழங்கவுள்ளார்.

கிளினிக் பதிவுப்புத்தகங்களை எடுத்துச் சென்ற நோயாளர்கள் அன்றையதினம் அவற்றைக் கொண்டு வருமாறு பதில் மாகாணப் பிரதிப் பணிபபாளர் அறிவித்துள்ளார்.

## சேதமுற்ற நிலையில் பண்ணைப் பாலம்

தீவகத்திற்கான ஒரேயொரு தரைப்பாதையாகவுள்ள பண்ணைப் பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள பலகைகள், இரும்புத் தகடுகள் என்பன விலகிக் காணப்படுகின்றன.

தற்பொழுது தீவுப்பகுதிக்கான வாகனப்போக்குவரத்துக்கள் அதிகரித்துள்ளது. இதனால், சிறுசேதமாக உள்ள இப்பாலம் பெரும் சேதமாக முன்னரே, திருத்தம் செய்வது அவசியம் எனத் தீவக மக்கள் தெரிவித்தனர்.

# திருமலையில் பிரித்தானிய தூதுவர் நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்

(கொழும்பு)

பிரித்தானியத் தூதுவர் மூன்று நாள் விஜயமாக திருகோணமலைக்குச் சென்றிருந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை சென்றிருந்த பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீவன் இவான்ஸ் அன்றையதினம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்குச் சென்றிருந்தார்.

கண்காணிப்புக்குழு அலுவலகத்திலுள்ள பிரதிநிதிகளுடன் உரையாடிய பிரித்தானிய தூதுவர் இவான்ஸ், பின்னர் பல்வேறு கிராமங்களுக்கும் சென்றிருந்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களையும், அவற்றைப் புனரமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் அவர் நேரில் பார்வையிட்டிருந்தார். அத்துடன், கிராமங்களிலுள்ள அடிப்படை வசதிக் குறைபாடுகள் பற்றி பிரித்தானியத் தூதுவர் விசாரித்து அறிந்துகொண்டதாகவும் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் திருகோணமலை கடற்படைத் தளத்தில் கடற்படை அதிகாரிகளையும் இவர் சந்தித்துப் பேசியிருந்தார்.

நேற்றுப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பூர் பகுதிக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராய்ந்த பிரித்தானியத் தூதுவர்-விடுதலைப் புலிகளின் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசினார்.

# கண்காணிப்புக் குழுவுக்கு எதிராக நாடு தழுவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்!

## ஜே.வி.பி. தயாராவதாக விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எதிராக நாடுதழுவிய ஆர்ப்பாட்டங்களையும் - எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்தப்போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச - செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு - புலிகளின் கைக்கூலிகளாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. இவர்கள் தமிழீழத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளையே எடுத்துவருகின்றனர். இதனால், கண்காணிப்புக்குழுவுக்கு எதிரான நடவடிக்கைகளை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



நாட்டைப் பிரிக்கச் சதி செய்யும் கண்காணிப்புக் குழுவை இங்கிருந்து வெளியேற்ற ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நாடு முழுவதும் நடத்த ஏற்பாடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்த விமல் வீரவன்ச -

கண்காணிப்புப் பணியில் வேறொரு நாட்டை ஈடுபடுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



பதினைந்து வயதிற்கு உட்பட்டோருக்கான, யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில், சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி கரப்பந்தாட்ட வீரர்களையும் மற்றும் பயிற்றுநர் இ.வசீகரன், கல்லூரி அதிபர் கி.நடராஜா, விளையாட்டு பொறுப்பாசிரியர் ச.செல்வக்குமரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜாவை உடனடியாகப் பதவி நீக்கவேண்டும்!

## தேசத்துரோகி என்கிறார் கொட்டகதெனிய

பொலிஸ் மா அதிபர் ஏ.ஈ. ஆனந்தராஜாவை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.எம்.ஜி.பி.கொட்டகதெனிய.

சிஹல உறுமய கட்சியில் இணைந்து செயற்படும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கொட்டகதெனிய - நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

பொலிஸ் மா அதிபர் ஆனந்தராஜா - புலிகளின் அதரவாளர். இவர் புலிகளுக்குச் சார்பாக நடந்துகொண்டிருக்கிறார். இதனால், நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கும், இறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, ஆனந்தராஜாவை அரசாங்கம் உடனடியாகப் பதவிநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்த விடயத்தில் தலையிட்டு, ஆனந்தராஜாவைப் பதவி நீக்க வழிசெய்யவேண்டும் என்றும் கொட்டகதெனிய மேலும் தெரிவித்தார்.

இவர் நடத்திய செய்தியாளர் மாநாடு - சிஹல உறுமயவின் தலைமையகத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய யூனியன் எம்.பி. இன்று கொழும்பு வருகிறார்!

ஐரோப்பிய யூனியனின் தேர்தல் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் குஷ்நகன் இன்று கொழும்புக்கு வருகிறார்.

இவர் எட்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பார் எனத் தெரிய வருகின்றது.

இவர் கொழும்பில் தங்கியிருக்கும்போது - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன், வன்னிக்குச்சென்று விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடனும் பேச்சுக்களை நடத்த இவர் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழில் குற்றப் பத்திரிகை தருமாறு விடுத்த கோரிக்கை நிராகரிப்பு!

## தமிழக பொடா நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சுப. வீரபாண்டியன், பாவாணன் உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள் தமக்குக் குற்றப் பத்திரிகைகள் தமிழில் வழக்கப்பட வேண்டும் எனச் சமர்ப்பித்த மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சென்னை பொடா நீதிமன்ற நீதிபதி இந்த மனுவை நிராகரித்தார். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட குற்றச்சாட்டு இவர்கள் மீது சுமத்தப்பட்டு, ஆங்கிலத்தில் குற்றப்பத்திரிகைகள் வழங்கப்பட்டிருந்தன.

இதற்கு எதிராகத் தமக்குக் குற்றப்பத்திரிகைகள் தமிழில் வழங்கப்பட வேண்டும் என இவர்கள் பொடா நீதிமன்றத்தில் மனுச்செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பொடா சட்டத்தின் கீழ்க் கைதாகி கடலூர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் உள்ளிட்ட ஆறு பேர்-தமக்குப் பிணை வழங்கப்பட வேண்டும் எனக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மீண்டும் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் ஏற்கனவே பலமுறை பிணை மனுத்தாக்கல் செய்திருந்தும், அவை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் பாதுகாப்பை பலப்படுத்த ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு!

## மூதூர் போன்ற சம்பவங்களை தடுக்கவாம்



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க படையதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மூதூர் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பைத் தொடர்ந்தே ஜனாதிபதி சந்திரிகா- கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், கிழக்குப் பகுதியில் கலகத்தடுப்புப் படையினரை அதிகளவில் பாதுகாப்பில் ஈடுபடுத்துமாறும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டார்.

# வடமராட்சியில் 50 குடும்பங்களுக்கு ஜி.ரி.இசற். வீடுகளை அமைக்கும்!

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 50 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

அல்வாய் வடக்கு, அல்வாய் மேற்கு, புலோலி வட மேற்கு, பருத்தித்துறை கிழக்கு, பருத்தித்துறை நகர் ஆகிய ஐந்து கிராமங்களைச் சேர்ந்த ஐம்பது பேர் இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்குத் தேவையான அனைத்துக் கட்டடப்பொருட்களையும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்ற ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அதிகாரிகள்- வறிய குடும்பங்களைத் தெரிவுசெய்தனர்.(23)

### இந்து மாநாட்டையொட்டி போட்டிகள்

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி அரியாலை சக்தி பண்ணிசை மன்றமும், அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலயமும் இணைந்து இன்று தொடக்கம் ஒரு வாரத்துக்குக் கலாசாரப் போட்டிகளை நடத்தவுள்ளன. அத்துடன் இந்து சமயத்தை மையமாக வைத்துக் கலை நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வுகளில் சமய அறிவுப்போட்டிகள், பண்ணிசை, சித்திரம், கோலம் அமைத்தல் போன்ற போட்டிகளும், பஜனை, பக்திப்பாடல இசைத்தல், சொற்பொழிவு, நடனம், பட்டிமன்றம் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி மகாவித்தியாலயம், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## விக்னேஸ்வரா கல்லூரியில் புலமைப்பரிசில் நிதியம்

(வடமராட்சி)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் புலமைப்பரிசில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமரர் ஆ.சுப்ரமணியம் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளால் இந்த நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் அரசாங்கத்தினால் நடாத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கும் புலமைப் பரிசிலை வழங்குவதற்கு இந்நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

புலமைப்பரிசில் வழங்குவதற்காக மூன்று இலட்சம் ரூபா நிதியினை அமரர் சுப்ரமணியம் குடும்பத்தினர் வழங்கியுள்ளனர். மேற்படி நிதியத்தின் தலைவராகப் பாடசாலை அதிபர் பே.சிவசிதம்பரமும், பழைய மாணவர் மன்றத்தின் தலைவர் லயன் தணிகாசலம் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (23)

## இடிந்துவிழும் நிலையிலுள்ள தொல்புரம் சந்தைக் கட்டடம்

தொல்புரம் மத்தியிலுள்ள பொதுச் சந்தைக் கட்டடம் இடிந்துவிழும் நிலையில் உள்ளது. இதனால், இச் சந்தைப்பகுதியில் நடமாட வியாபாரிகளும், பொதுமக்களும் அஞ்சுகின்றனர்.

பலவருடங்களாக இந்தச்சந்தையின் கட்டடங்கள் திருத்தப்படாமல் இருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சந்தைக் கட்டடத்தைத் திருத்தியமைத்துத் தருமாறு இப்பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்தும் - பயன் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரியவருகின்றது. (100)

### பிரதம தபாலகத்தில் பெறுமதியான முத்திரைகள்

யாழ்.பிரதம தபாலகத்திற்கு 500 ரூபா, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும், பொதுமக்கள் இவற்றைக் கொள்வனவு செய்யமுடியும் என்றும் பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

### முகமாலையில் உப அலுவலகம்

பளைப் பிரதேச சபையின் உதவி அலுவலகமொன்று இந்த வாரம் முதல் முகமாலையில் செயற்படவுள்ளது.

இதேவேளை - பளைப் பிரதேச சபை ஏற்கனவே முள்ளிப்பற்று, புலோப்பளை ஆகிய இடங்களில் உப அலுவலகங்களை ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (34)

### புதிய உலர் உணவு அட்டைகள்

கரவெட்டி பிரதேச செயலக - கிராம அலுவலர் பிரிவுகளில், புதிய உலர் உணவு அட்டைகள் நேற்று முதல் அமுலுக்கு வந்திருப்பதாகக் கரவெட்டி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (116)

## உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்து வெளியேறிய வைத்தியர்களில் 16 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவபீடத்திலிருந்து வெளியேறிய 50 பேரில், மிகுதி 34 பேர் வெளிமாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளில் உள்ளகப்பயிற்சிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி 34 பேருக்கும் சுய விருப்பத்தின் அடிப்படையிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுக்கு நாளை உளநலப் பயிற்சிப் பட்டறை!

(சிறுப்பிட்டி)

நெதர்லாந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், சாந்திகமும் இணைந்து நடாத்தவுள்ள உளநல சிகிச்சை தொடர்பான பயிற்சிப்பட்டறை - அகவொளி குடும்பவளத்துணை நிலையத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாக 5 நாட்களுக்கு நடைபெறவுள்ள இப்பயிற்சிப்பட்டறையில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெளிநாட்டு சமூகசேவை நிறுனங்களின் 40 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை நெதர்லாந்தைச் சேர்ந்த உளநல நிபுணர் ஜொப் மேஜரும், சித்திர வடிவமைப்புச் சிகிச்சையாளர் பெயிற்றி மேஜரும் வழங்கவுள்ளனர். (78)

### இடமாற்றம்

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீனத்தின் நெடுந்தீவுப் பகுதிக்கான போதகர் எஸ்.ஐ. ஆனந்தராஜா கடந்த மாதத்துடன் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இவர் கடந்த நான்கு வருடங்களாக இறைபணியிலும், நெடுந்தவின பொது விடயங்களிலும் அளப்பரிய சேவையாற்றி, மக்கள் மனதில் இடம பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இடத்துக்கு வன்னி மாவட்டத்திலுள்ள கோணாவில் பகுதியில் பணியாற்றிய போதகர் யோன் செல்வம் நியமிக்கப்பட்டுள்ளார். (113)

### பளையில் மரக்கறிச் சந்தை

பளை பிரதேசசபையின் உதவியுடன் பளையில் 2 இலட்சத்து பத்தாயிரம் ரூபா செலவில் மரக்கறிச் சந்தை அமைக்கப்பட்டுவருகின்றது. கடந்த காலங்களில் இப்பகுதியில் ஏற்பட்ட யுத்தத்தில் பளை சந்தைப் பகுதிக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது. இப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துவரும் வேளையில் மரக்கறிச் சந்தை அமைக்கப்பட்டு வருகிறது. (34)

## பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் மறு அறிவித்தல்வரை ஒத்திவைப்பு!

அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தால் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் இன்று நடாத்தப்படவிருந்த "அஸ்ரா" கேடயத்துக்கான துடுப்பாட்டப் போட்டிகள் யாவும் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முதல்முறையாக அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் இப்போட்டிகள் மிக விரைவில் - ஏற்கனவே வழங்கப்பட்ட போட்டி நிரல்படியே நடாத்தப்படும் என்றும், இதில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று வெற்றிபெறும் அணிகள் வட - கிழக்கு மற்றும் தென்பகுதி பாடசாலைகளுடன் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் செய்யலாம்

(அரியாலை)

அரியாலை காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினரால் அமரர் எஸ்.ஆர். இரத்தினசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான வடமாகாண மட்டத்தில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அரியாலை மேற்கிலுள்ள காந்தி சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (55)


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்

(நேற்றுக் கொண்டாடப்பட்டது)

பெயர் : பி.பிரபாலினி
முகவரி : பைங்கூரன், கம்பர்மலை, வல்வெட்டித்துறை.



### முதலாவது அகவையில்



பெயர் : ரா.தக்ஷாயினி
முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### நான்காவது அகவையில்

பெயர் : ச.நிர்மலராஜ்
முகவரி : 11 ஆம் வட்டாராம், நெடுந்தீவு.



### எட்டாவது அகவையில்



பெயர் : கோ. விதுஷன்
முகவரி: நெடியகாடு வடக்கு, வல்வெட்டித்துறை.

### பத்தாவது அகவையில்

பெயர் : நா.தேனுகா
முகவரி : மகாத்மா வீதி, நெல்லியடி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------------
பெற்றார் ஒப்பம்

# ஒரு பூவின் பயணம்



அம்மா ஆயிரம்
கேள்வி கேட்பாள்
அண்ணா காலை
ஒடிச்சிடுவேன் என்பான்
அப்பா முகத்தைத்
தூக்கி வைத்துக்
கொள்வார்.
ஆறுமணிக்கு நான்
வீட்டில் இருக்கனும்.
ஏழு மணிக்குப் போனால்கூட
ஏதோ 'தீமை'யைப்
பண்ணீட்டு வாறதாய் நினைப்பு
என்ன பண்றது.
பொண்ணாய் பிறந்துட்டமே...
- அனார்.

அன்புகூட அதிகமாகும் போது அடக்குமுறை ஆகிவிடுகிறது. பெண்ணியல்பு மாறாதபடி சுயமாகச் சிந்திக்கச் செயற்பட அன்பினாலான அடக்குமுறையும் தடைக்கல்லாகிறது. யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்தவரையில் பெண்ணடிமைத்தனம், பெண்ணுரிமை, பெண்ணியச் சிந்தனைகள் என்பவை வலுவற்றிருப்பினும் இவற்றின் சாயல்கள் இல்லாமல் இல்லை.

அடிமைத்தனம் என்பது பிரேரிக்கப்பட்ட அல்லது காலகாலமாகத் தொடர்கின்ற விதிகளை- நியதிகளாக ஏற்றுக்கொள்ளுதலாகும். சமூகநியதிகளின் கீழ் ஒழுகுவதால், ஒரு பெண் தன்னை ஒழுக்கமுள்ளவளாக அல்லது அடக்கமுள்ளவளாகப் பிரகடனப்படுத்திக்கொள்ள முடியும். அடக்கம்

## அத்தியாயம் 04

யாழ்ப்பாணப் பெண்ணின் இன்றியமையாத நற்பண்பாகவுள்ளது. ஒரு பெண்ணின் திருமணகாலத்தில் அவளிடம் சமூகம் எதிர்பார்க்கின்ற முதல்வரிசைப்பட்ட எதிர்பார்ப்புக்களுள்- சீர்வரிசையுடன், போட்டிபோட்டு நிற்கும் கேள்வி 'பெண் அடங்கி நடப்பாளா?' என்பது. யாருக்கு என்பது சொல்லப்படுவதில்லை. தன்னை மணம்புரியும் ஆணுக்கு, அவனது சுற்றத்திற்கு, தாய், தந்தையருக்கு, சமூகத்திற்கு என இது விரியும். எனவே - தயக்கம், பயம், தன்கருத்தைச் சொல்லா திருத்தல் ஆகிய பண்புகள் அமையும்படி சிறுவயதிலே இருந்து பெண் படினப்படுத்தப்படுகிறாள், வளர்க்கப்படுகிறாள்.

மேலைத்தேசத்துப் பெண்களின் நிலை, கலாசாரரீதியில் விமர்சனங்களுக்கு உள்ளாகின்றது. ஆனால், செயற்படுந்திறன், வேகமான இயக்கம், தனித்தியங்கும் ஆற்றல் என்பவற்றில் அவர்களின்நிலை எடுத்து நோக்கப் படத்தக்கது. வேகமாகச் சலசலத்தோடும் நீரோட்டமாக வாழ்வு அமையவேண்டும். அங்கு தேக்கம் இல்லை, பாசிகள் திரள்வதில்லை, சேறு சேர்வதில்லை. சமூகஇயக்கம் வேகமாக, உற்சாகமாக அமைவதில் பெண் பெரும்பங்கு வகிக்கிறாள்.

சுதந்திரமாகச் சிந்திக்கத்தக்கவளா உங்கள் பெண்குழந்தை? தனித்தியங்கும் ஆற்றல் மிக்கவளா அவள்? எந்தச் சூழலிலும் கலங்காது, எந்த நெருக்கடிகளையும் சமாளித்துத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளத்தக்கவளா அவள்? இக்கேள்விகள் ஒவ்வொரு பெறறோரிடமும் கேட்கப்பட வேண்டிய கேளவிகள். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை வாழ்வு அவளது படிமானம் அல்ல. நாளைய நாளில் குடும்பம் என்கின்ற மகத்தான கட்டமைப்பினை ஆளப்போகின்ற மகாராணி அவள. குழந்தைப் பருவத்திலேயே இந்த நம்பிக்கை வித்தினை அவள் மனதில் ஊன்றிவிடுங்கள். நாள்தோறும் சொல்லால், செயலால் அந்த வித்து வளர நீரூற்றுங்கள்.

திரிபுரம் எரிக்க
வில்வளைக்கும் ஸ்ரீருத்திரனின்
வில் நாணில்
அம்பினைப் பூட்டவல்லவள் நான.
மகாசக்தியின் முகம்
எனது.

இந்தத் தன்னம்பிக்கையின் சுடர்வு - பெண்ணின் மாற்றமுடியாத இயல்பாக அமையவேண்டும். அவள் நடப்பாள் - சோம்பலில் ஊறி, சுமையென அவளை மாற்றும் மரபுகள் பொடிபட... மானுட மகத்துவம் மேன்மையுற...

(பயணம் தொடரும்)

ச.சாரங்கா

# மரபெனும் விலங்கினுள் மயங்கி... மயங்கி...

பெண்ணைக் 'கண்ணெனப் போற்றும்' பண்பினால் அவள் சிறுவயதிலிருந்தே தனித்தியங்காதிருக்க ஆரம்பிக்கிறாள். தந்தை, அண்ணன், தம்பிகளால் மிகக் கவனமாகப் பேணப்படுகிறாள். ஒரு குடும்பத்தில் கடினவேலைகள் என்றால் அதைப் பெரும்பாலும் ஆண் பொறுப்பேற்கிறான். இச்சந்தர்ப்பங்களில் உண்மையில் ஆண் வழிச் சமூகத்தின் முதுகில் பெண் சவாரி செய்கிறாள். தந்தையிடமிருந்து கணவனிடம் கையளிக்கப்படுகின்ற பெண், அங்கும் அதேரீதியான காப்பினை வேண்டி நிற்கிறாள். இவ்வாறான நிலையை எமது சமூகத்தில் பொதுவாகக் காணலாம். பெண் பலவீனமானவளாக நோக்கப்படுவது எம் மண்ணில் காலகாலமாக நிலைத்தியங்கும் சமூகப் பார்வையாகும். இது உண்மையில் பெண்ணுக்குச் சௌகரியமாகப் போயிருக்கிறது.

ஒரு பஸ் பிரயாணம். மட்டுமட்டான இருக்கைகள். புதிதாக ஒரு பெண் பஸ்ஸில் ஏறுகிறாள். இருப்பவர்களில் ஒரு சிறு பையனோ அல்லது வயதானவரோ எழுந்து அவள் இருக்க இடங்கொடுப்பார். அங்கிருக்கின்ற ஏனைய பெண்கள் "ஒரு ஆண் எழுந்து இடங்கொடுப்பார்" என்ற நம்பிக்கையுடன் அசைவின்றி இருப்பார்கள். இந்தக் காட்சியில்கூட ஒரு மரபுவழிப்பட்ட தாக்கம் உள்ளது. பெண் மென்மையானவள் என்ற கருத்துச் சமூகமயமாக்கப்பட்டு, அதனைப் பெண் தனக்குச் சௌகரியமாயப் பயன்படுத்திக்கொள்கின்ற நிலைக்கு இது ஒரு உதாரணம். எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் பெண்ணின் சுமைக் குறைப்புக்கு மரபுகள் வழிசமைத்துக் கொடுப்பத்தில் பெண்ணியம் பற்றிய போர்க் கொடிகள் எழுவது குறைவு. மேலும் மனித உரிமைகளுக்கான போர்களும், அதில் பெண்கள் சுதந்திரமாகப் பங்கேற்பதுமானநிலை 'பெண்ணுரிமை' பேச்சை இங்கு பின்தள்ளியுள்ளது.

பெண்களுக்கான அதிகாரப் பகிர்வு சமமாக வழங்கப் படுவது ஆண்களின் சுமைகளைக் குறைத்து



சமூகமுன்னேற்றத்துக்கு வழிசெய்யும். மரபுப் போர்வையினால் இழுத்து மூடியபடி குறுகிய வட்டங்களுள் வாழ்ந்துகொள்வதற்கு எங்கள் பெண்கள் தயாராகவே இருக்கிறாாகள். தங்கள் முன்னேற்றங்களில் அக்கறையற்றுக் குடும்பத்தின் ஆண்கரங்களுள் சொகுசாக வாழ்ந்துகொள்ளும் பெண்கள் உண்மையில் சமூகச் சுமைகளாகத் தேங்குகிறார்கள். படிமசிந்தனைகளிலிருந்து பெண் மீளமுடியாத தன்மையும் இங்குள்ளது. மீள நினைக்கும் பெண் "நல்ல பெண்" என்ற தகைமையை இழக்கவும் நேரிடலாம்.

படிமங்கள் குந்தியெழுந்து
பழுத்துப் போனதென் முகம்.
ஒவ்வொன்றாய்க் கழற்றி எறிந்து
அல்லது
செட்டையுரித்து
வளர்ந்து தான் பார்க்கிறேன்.
புதுத்தோலாய் மின்னுகிறது படிமம்
பின்னோக்கியே...

'ஆகர்ஷியா' வின் இக்கவிதையில் காணப்படுவதுபோல யாழ்ப்பாண மரபுவழிப்பட்ட சிந்தனைகளில் இருந்து பெண்கள் மீளுதல் கேள்விக்குரியதே. இங்குள்ள பெண் அடக்குமுறைகளைப் பெண் தன்மீது தானே வலிந்தேற்றிக்கொள்ளுகின்ற அல்லது சிறுவயதிலிருந்தே தன்நியதிகளாக அவள் உருவகித்துள்ள மரபுகள் பெரும்பங்கு வகிக்கின்றன.

பிரபஞ்சனின் கருத்துப்படி - பெண்விடுதலை பற்றிக் கவலைப்படுவதனால், ஆண் விடுதலை பற்றியும் கவலைப்பட்டாக வேண்டும். பெண்விடுதலையின்றி ஆண்விடுதலையும் இல்லை. ஒரு மென்பூவாகக் கருதப்படுகிறாள் பெண்- அல்லது ஆண்மகனால் காப்பாற்றப்பட்டாக வேண்டியவளாக இருக்கிறாள் பெண் - அல்லது சகல சுதந்திரங்களும் மறுக்கப்பட்ட அடக்கு முறையுள் வளர்க்கப்படுகிறாள் பெண். எவ்வாறாயினும், அது ஆண்வழிச் சமூகத்தையும் பாதிக்கிறது. சமூக முன்னேற்றத்தையும் பாதிக்கிறது. பெண்தொடர்பான கருத்துக்கள் எல்லாம் ஆணைக் குற்றம் சுட்டிப்பேசுவன அல்ல. எமது சமூகத்தில் ஒப்பீட்டளவில் பெண்களால் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறையும், மரபு வழிப்பட்ட சிந்தனைகள் பெண்மீது கொள்ளும் ஆதிக்கமும் - ஆண்களாலான அடக்குமுறைகளைவிட மிக அதிகமாக உள்ளன.

"அமெரிக்கப் பெண்கள் முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள். அறியும் ஆர்வம் அவர்களிடம் மிதமிஞ்சிக்கிடக்கிறது. ஆயிரக் கணக்கானோர் தாம் தாழ்ந்தபடியில் சோம்பிக் கிடப்பதற்குப் பதிலாக - தாங்கள் பிறந்ததற்கான உன்னதநிலையைத் தேடுகின்றனர். தேடிக்காணவும் செய்கின்றனர்..."

- சுவாமி விவேகானந்தர்

# தலைவி நீ தலை நிமிர்...!

சிந்திக்கும் ஆற்றல் கொண்ட திறமைமிக்க ஒருவருக்குத் தனிப்பட்ட கருத்துகளிருப்பது இயல்பு. ஒரு குழுவாகச் செயற்படும்போது பல்வேறு கருத்துக்களைக் கொண்டோர் அங்கிருப்பது தவிர்க்கமுடியாதது.

நீ தலைவியாகச் செயற்படும் இல்லத்திலோ, நிறுவனத்திலோ உன்னோடு ஒருங்கிணைந்து உழைப்போரிடையே கருத்து முரண்பாடுகள் காணப்பட்டால், அதை நீ வரவேற்க வேண்டும்.

கருத்து முரண்பாடுகள் அழிவிற்குக் காலாகிவிடுமெனக் கருதுவது தவறு. முரண்பாடுகளால் தீமைகளும் ஏற்படலாம்.

முரண்பாடுகள் தவறான வழியிற் செல்லும்போது அவை அழிவுகளுக்கு வழிவகுப்பது உண்மையே. முரண்பாடுகளுக்கான காரணங்களைப் புரிந்துகொண்டு, அவற்றிலிருந்து நற்பயன்களைப் பெறக்கூடியதாக வழிநடத்தாது - முரண்பாடுகளை அதிகரிக்கவிட்டு, புரிந்துணர்வின்றி, அவற்றின் பயனாய் வன்முறைகள் தோன்ற வழிவிட்டால் - மிகப்பெரிய அழிவுகளும், இழப்புகளும் ஏற்படும். ஒரு நாட்டைப் பொறுத்தவரை இதனால் போரும், இறப்புகளுங்கூட ஏற்படலாம்.

முரண்பட்ட கருத்துக்கள் அடக்கப்பட்டாலும், இதேபோன்று தீமைகளுக்கே அது வழிவகுக்கும். அடக்குமுறை - ஆரம்பத்தில் இலகுவில் பிரச்சினைகளைத் தீர்ப்பதுபோலத் தோன்றினாலும், காலப்போக்கில் எதிர்ப்பு



களையும், விரக்தி, வெறுப்பு ஆகியவற்றையும் ஏற்படுத்தி, பல தீய விளைவுகளையே தரும்.

முரண்பட்ட கருத்துகளுக்குச் செவிகொடுத்த அவற்றை நல்லவழியில் திசை திருப்பிச் செயற்பட வைத்தால் மிகச்சிறந்த நல்விளைவுகளை ஏற்படுத்தலாம்.

கருத்து முரண்பாடுகள் தோன்றியதுமே அதைச் சரியான திசையில் திருப்புவது ஒரு நல்ல தலைவியின் திறமையாகும். குழுவாக இயங்கும் அனைவரும் ஒருங்கேயிருந்து கருத்துக்களைக் கூறி அவற்றிடையே காணப்படும் முரண்பாடுகளை ஒருங்கிணைத்து தீர்க்க முற்படவேண்டும். அவர்கள் கருத்துக்களைக் கூறி விவாதிக்கும்பொழுது - முரண்பாடு - மன இறுக்கத்தையும, விரோதத்தையும் ஏற்படுத்தாது - நட்புறவுடனும், புரிந்துணர்வுடன் விவாதிக்கப்படச் செய்வது வெற்றியின் முதற்படியாகும்.

முரண்பட்ட கருத்துக் கொண்டோரின் தனிப்பட்ட அபிலாசைகளையும், கருத்து முரண்பாட்டிற்கான மூல காரணங்களையும் அடையாளங்கண்டு முரண்பாட்டில் ஒர் இணக்கப்பாட்டைக் கொண்டுவருவது அடுத்த படியாகும்.

அவர்கள் அனைவரது ஆலோசனைகள் மூலமே அபிலாசைகளை நிறைவேற்றவும், இணக்கப்பாட்டை ஏற்படுத்தவும் வழிகாணலாம். இப்படி வழி காணுவது சுலபமாக இருக்காது. பல தடவைகள் அனைவரும் ஒருங்கேயிருந்து உரையாடுவதன் மூலமே, இந்த ஆலோசனைகளைப் பெற்று அவற்றின் சாத்தியங்க்ள், அசாத்தியங்கள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து அனைவரும் ஏற்கும் வழிமுறைகளையோ, திட்டங்களையோ வகுக்கலாம்

தனிப்பட்ட ஒருவரது சிந்தனையிற்பிறக்கும் செயற்திட்டங்களைவிட, இவ்வாறு முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு வகுக்கப்படும் திட்டங்கள் சிறந்தவையாக அமைவது இயல்பு.

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# ஆசையாக ஒரு கைப்பை!

இந்த நாகரிகயுகத்தில் கைப்பை இல்லாமல் வெளியே புறப்படும் பெண்களைப் பார்ப்பதே அரிதான விடயம் இல்லையா! கைக்கு அடக்கமான, அளவான கைப்பை களுக்கு எப்போதும் நல்ல வரவேற்பு உண்டு. விதம்வித மான கைப்பையோடு நடைபோட ஆசைதான். ஆனால், கடைகளில் அவற்றின் விலையைக் கேட்டால் மயக்கமே வருகிறது. நாங்களே விரும்பியபடி கைப்பை செய்ய முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். எனக்கு விதம்விதமான கைப்பை வடிவங்கள் தெரியும் ஆனால், அதை முறையாகத் தைக்கத்தெரியாது. அல்லது "கைப்பையை அழகாகத் தைக்கத்தெரியும். ஆனால், சிப் மட்டும் தைக்கத் தெரியாதெனக் கவலைப்பட வேண்டாம். முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் தவிப்பவரா நீங்கள்?" இனி இல்லை அந்தக் கவலை.

யாருடைய உதவியும் இல்லாமல் நீங்களே முழுக்க முழுக்கக் கைப்பையைத் தைக்க முடியும்.








### தேவையான பொருட்கள்

25 செ.மீ. நீளம், 18 செ.மீ. அகலமுள்ள பஞ்சுத் தோல் 2 துண்டுகள், 11.5 செ.மீ. அகலமுடைய வட்டவடிவத் தோல் 2 துண்டுகள், 25 செ.மீ. நீளமுடைய சிப் 1, 1.5 மீற்றர் Gold கயிறு 3, 10 ஆம் நம்பர் நூல் 1, ஊசி.

### செய்முறை

வரைபடத்திலுள்ள அம்புக்குறியிட்டபடியே பஞ்சுத் தோல் கீழ்நோக்கி இருக்குமாறு 2 துண்டை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்.

பின்னர், அ முதல் ஏ வரையுள்ள குறியீடுகளைப் பஞ்சுத் தோலில் மற்றும் பஞ்சில்லாத தோலில் குறித்துக் கொள்ளுங்கள்.

முதலில் பஞ்சுத் தோலின் மேற்பகுதியில் சிப் வைத்துத் தைக்கவேண்டும்.

அதற்கு முன் கவனிக்க வேண்டிய சில முக்கிய விடயங்கள் முதலில் அ, ஆ, இ இந்தப் பகுதியில் சிப்பை நேராக வைத்துச் சிப்பிலும் அ, ஆ, இ என்று குறித்துக்கொள்ளுங்கள். சிப்பை வைத்து இணைத்துத் தைக்கும்போது, தெறியோட்டைத் தையல் மூலம் இரண்டு பக்கங்களையும் படத்தில் உள்ளபடி தைக்கவேண்டும்.

அடுத்துத் கைப்பிடி இணைப்பது பற்றிப் பார்ப்போம்.

11/4 மீற்றர் உள்ள 3 கயிறுகளையும் பின்னல் பின்னுவதுபோலப் பின்னி, இரண்டு பக்கமும் முடிச்சுக்கள் போட்டுப் படத்தில் காட்டியபடி சிப்பின் இரு ஓரங்களிலும் வைத்து இணைத்துத் தைக்க வேண்டும். பின் (இ, உ, ஊ) பகுதிகளை இணைத்துத் தைக்கவும்.

உருளை வடிவம் கிடைப்பதற்காக இரண்டு பக்கங்களையும் இணைக்கவேண்டும். இ, ஊ உடன் முறையே எ, ஏ வை இணைத்துத் தைக்கவேண்டும். இருபுறமும் இதேபோல இணைத்துத் தைக்கவும். தைத்தவுடன் சிப்பைத் திறந்து விட்டு வாய்ப்பக்கத்தால் திருப்பினால் அழகான கைப்பை தயாராகிவிடும்.







தோலின் இழைகள் கீழ்நோக்கி இருப்பதால், சிப்பின் இழைகள் சிக்காமல் இரண்டு பகுதிகளையும் சுகமாகத் திறக்கவும், மூடவும் முடியும்.

பஞ்சுத் தோல்களுக்கு இடையிடையே விதம் விதமான மணிகளை வைத்துத் தைத்தால் இன்னும் அழகாகத் தோற்றமளிக்கும்.

நீங்கள் இதை அக்கறையுடன் செய்த்தால் அதற்கு விலை மதிப்பே இல்லைதான். ஆனாலும், 100 ரூபா செலவில் தயாராகிவிடும் இந்தக் கைப்பை 150 ரூபாவரை தாராளமாய் விக்கலாம். பஞ்சுத்தோலில் மட்டும்தான் இதைச் செய்யமுடியுமா என்பவர்களுக்கு வெல்வெற் மற்றும் கனமான துணிகளாலும் இதேபோல அழகான கைப்பையைச் செய்யலாம்.

# கோடை வெயிலைச் சமாளிக்க உடுக்கின்ற ஆடை முதல் உண்ணுகின்ற உணவுவரை கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

★ கீரைகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். கீரையானது குளிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய அருமருந்தாகும்.

★ பிஞ்சுப் புடலங்காய், பூசணிக்காய், பரங்கிக்காய் என்று நீர்ச்சத்துள்ள காய்கறிகளைக் கூட்டாகச் சமைத்துச் சாப்பிடலாம்.

★ எலுமிச்சம்பழம், தோடம்பழம், தக்காளிப்பழம், திராட்சைப்பழம் போன்ற பழவகைகளைப் பானமாகச் செய்து போத்தலில் வையுங்கள். வெயிலில் அலைந்து விட்டு வரும்போது அருந்தக் குளிர்மையாக இருக்கும்.



★ பழவகைகளையும் சாலட் பண்ணிச் சாப்பிடலாம்.

★ வீட்டின் தரைகளில் அடிக்கடி தண்ணீர் தெளித்துத் துடைத்து விடுங்கள். குளிர்ச்சியாக இருக்கும்.

★ மெல்லிய பருத்தித் துணியில் ஆடைகளைத் தைத்துப் போடுங்கள். இவற்றை உடுப்பதால் வியர்வையிலிருந்து விடுதலை பெறுவதோடு, கம்பீரமாக இருக்கும்.

★ குழந்தைகளுக்குச் சிறிது வெங்காயம், வெள்ளரி, கரட், தக்காளி, இஞ்சித்துண்டு எல்லாவற்றையும் நன்றாகத் துருவிச் சிறிது மிளகுத்தூளைத் தூவி சாலட் செய்து கொடுத்தால் உடம்புக்குக் குளிர்மை கொடுப்பதுடன், ஆரோக்கியத்தையும் தரும்.

★ பருத்தித்துணிகளில் ஜன்னல், கதவுகளுக்குத் திரைச்சீலை போடுங்கள். மத்தியானவேளைகளில் திரைச்சீலையை நனைத்து தொங்கவிட்டால் வீடே ஏசி போட்டது போல் குளிர்மையாக இருக்கும்.

★ உதடுகள் வறண்டுபோகாமல் இருக்க - பாலாடைகளைத் தடவிக் குளிப்பதுடன், வஸிலினால் அடிக்கடி உதடுகளைத் தடவிக்கொள்ளுங்கள்.

★ காரம் நிறைந்த குழம்பு வகைகளைத் தவிர்க்க வேண்டும். பருப்பு வகைகளை அதிகளவு உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். இது வெப்பப்பருக்களிலிருந்து பாதுகாக்கும்.

★ எண்ணெய்ப் பதார்த்தங்களைத் தவிருங்கள். பொரியல் வகைகளையும், காரவகைகளையும் மூன்று மாதத்துக்குக் குழந்தைகளின் கண்ணிலே காட்டவேண்டாம்.

★ ரொட்டி, பாண் தவிர்த்து - இடியப்பம், உப்புமா, தோசை எளிதில் ஜீரணமாகும் உணவுகளைச் செய்து சாப்பிடுங்கள்.

★ வாரம் இருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால், உடம்பு குளிர்ச்சியாவதுடன், தோலும் வறண்டுபோகாமல் இருக்கும்.

★ குளிர்சாதனப் பெட்டியில் தினமும் பழங்களைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, சீனியையும் சேர்த்து ஒரு கிண்ணத்தில் போட்டு வையுங்கள். வெயில் காலத்தில் வெளியில் போய்வந்தவுடன் உடன் எடுத்துச் சாப்பிடலாம்.

# கவிதைச்சோலை

## அன்னை மடிக்கே....

திருமணத்து தாழும் பூக்கள்
உலர்வதற்குள்
தாலி தந்தவனைக் காணவில்லை

உதிரம் கசிந்த
செம்மண்ணெடுத்து
முந்தானைக்குள்
முடிந்து கொண்டேன்.
தந்தை யாரென
குழந்தை கேட்டால்
கண்ணீரோடு பிரித்துக் காட்ட..

மௌனமாய்
சுமக்க வேண்டியதாயிற்று
அகதியெனும் அடையாளத்தை



வாழ்விலும் வயிற்றிலும்
வறுமை வெறுமை
நெஞ்சிலும் நினைவிலும்
துக்கம் ஏக்கம்

யுத்த களமாகிப் போன
தாய் மண்ணைக் காண
மனசுக்குள் மருகுகிறேன்

பூட்டுக்கு சாவி கூட
வாங்க முடியாதவளால்
விசா வாங்குவதென்பது...?

உதிரம் உப்புக் கண்ணீரும்
பெருகிப் பெருகி
இலங்கைத் தீவு
இந்தியப் பெருங்கடலுக்குள்
மூழ்கிப் போகாமலிருந்தால்

அனுப்பி வையுங்களேன்
அன்னை மடிக்கே மீண்டும்....

செண்பக பூங்குழலி

# மஞ்சளின் பொருளாதார தொழிலியல் ரீதியான பயன்கள்

மஞ்சள் இல்லாவிட்டால் சமையலே இல்லை என்று கூறத்தக்க வகையில் அனைத்து உணவுப்பொருட்களிலும் இது இடம்பெறுகின்றது. உணவுப் பாதுகாப்பாளராகவும் மஞ்சள் தூள் பயன்படுகிறது.

பச்சை மஞ்சளிலிருந்து ஒரு வகை எண்ணெய் எடுக்கப்படுகின்றது. பித்தப்பை நோய்க்கு இது பயன்படுகிறது. மணம் நிறைந்த கிறீம் மற்றும் அழகுப்பொருட்கள் பலவும் மஞ்சளில் இருந்து தயாரிக்கப்படுகின்றது. பற்றீரியா மற்றும் பூஞ்சண எதிர்ப்பு மருந்துகள் இதிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

## மஞ்சள்...

மஞ்சள்- நுண்ணுயிர்களை, நோய்க்கிருமிகளை அழிக்கும். வெப்பத்தை ஏற்படுத்தி, வாயுவை வெளிப்படுத்தும். வயிற்றுப்புழு, பூச்சிகளை அழிக்கும். மூலநோயைக் குணப்படுத்தும். தொண்டை நோயை நீக்கும். விஷங்களை இறக்கும்.

குளவி, தேனீ போன்றவை கடித்தால் வலி, கடுப்பு ஏற்படும். அப்போது ஒரு துண்டு மஞ்சளுடன், சிறிய வேப்பிலை சேர்த்துப் பூசினால் விஷம் முறியும், வலியும் தீரும்.

கரப்பான் பூச்சி மற்றும் வேறு ஏதாவது பூச்சி கடித்தால் ஏற்படும் வலி, கடுப்பு, வீக்கம் தீர்வதற்குக் கடிபட்ட இடத்தில் மஞ்சளை அரைத்துப் போட்டுச் சுண்ணாம்புடன் சேர்த்துக் குழைத்துப் பூசினால் வீக்கம் குறைந்து வலி நீங்கும்.

## மங்களம்...

காய்ச்சல், தும்மல், மூக்கில் நீர் வடிதல் இவற்றால் தலை பாரமாக இருக்கும். தொடர்ந்து தும்மல் வரும், கண்கள் கூசும். இந்நிலையில் தணலில் மஞ்சள் தூளைப்போட்டு, அதிலிருந்து எழும் புகையை மெதுவாகச் சுவாசித்தால் நல்ல பலன் கிடைக்கும், தொல்லைகள் நீங்கும்.

உடலில் காரணமில்லாமல் அரிப்பு ஏற்பட்டு, அந்த இடத்தில் சொறி வந்து, தோல் தடிப்பு ஏற்படும்போது - சிறிதளவு மஞ்சள், ஆடாதோடை இலைகள் சேர்த்து அரைத்துப் பூசினால் அரிப்பு நீங்கித் தடிப்பு மறையும்.

உடலில் தேமல் ஏற்பட்டால்- அரை லீற்றர் நல்லெண்ணையில், கைப்பிடி மஞ்சற்துண்டு எடுத்து இடித்துப் போட்டுக் காய்ச்சி, வடிகட்டிப் பூசிவந்தால் தேமல் மறையும்.



வித்தியாசமான உணவு வகைகளைச் சாப்பிடுவதால் ஏற்படும் வாயுக் கோளாரைக் குணப்படுத்த - சிறிதளவு மஞ்சற்தூளோடு தேன் கலந்து சாப்பிட்டால் வாயுக்கோளாறு தீரும்.

எதிர்பாராத விதமாகத் தீக்காயம் ஏற்பட்டு விட்டாலோ, அல்லது சுடுநீர், நீராவி ஆகியவற்றால் ஏதேனும் கொப்புளம் மற்றும் தீப்புண் ஏற்பட்டால் - சிறிதளவ வெங்காயச்சாற்றை எடுத்து, மஞ்சள் தூளைச் சேர்த்துக் குழைத்துப் பூசினால் தீப்புண் கொப்புளம் மாறும்.

அளவுக்கு மீறி மதுபானம் அருந்தியதால் ஏற்பட்ட மயக்கத்தைப் போக்க - மஞ்சளை நெருப்பில் இட்டு அதில் எழும் புகையைச் சுவாசித்தால்போதும்.

பாலாடையுடன் மஞ்சள் தூளைம் கலந்து, முகத்தில் பூசி, அரைமணி நேரம் கழித்துக் கழுவிவர முகம் மென்மையாகிப் பொலிவாகும். பருக்களும் மறையும்.

## மருத்துவம்...

நாள்பட்ட புண் அல்லது ஆறாத புண் இருந்தால் - மஞ்சளை நீரில் இட்டுக் காய்ச்சி, அந்த நீரால் கழுவி வந்தால் புண் ஆறும்.

வீட்டைச் சுற்றி மஞ்சள் பொடியைக் கரைத்து நீரைத் தெளித்தால் தொற்றுநோய்க் கிருமிகள் பரவாது.

மஞ்சள் தூளுடன் ரெய் சேர்த்துக் குழைத்துத் தொண்டை மேல் பூசிவர தொண்டைப்புண் குணமாகும். கோடைக்கட்டி, வியர்குரு, அரிப்பு இவற்றைப்போக்க - சம அளவு சந்தனம், மஞ்சள் தூள், வேப்பிலைப் பொடி சேர்த்துக் குழைத்துப் பூசினால் சரியாகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு
படிப்பது சிவபுராணம், இடிப்பது சிவன்கோவில்
-தமிழ்ப் பழமொழி

# நமது நோக்கு

## புதிய மொந்தையில் பழைய கள்!

யாழ்.நகரப் பகுதியிலுள்ள உயர்பாதுகாப்பு வலயத்தைத் தளர்த்தி, அங்குள்ள படைமுகாமை இடமாற்றுவதான விவகாரம் - தொடர்ந்தும், நகரப் பகுதிக்குள்ளாகவே இராணுவம் தனது பிரசன்னத்தைத் தக்கவைப்பதற்கான முயற்சிகளில் பிடிவாதத்துடன் இருப்பதால் - சிக்கலுக்குரியதாகவே மாறிவருகிறது.

யாழ்.நகரின் மத்தியிலுள்ள இரண்டு ஹோட்டேல்களிலிருந்தும் 80 வரையான வீடுகளிலிருந்தும் வெளியேறவிருப்பதாக அறிவித்திருக்கும் இராணுவத்தரப்பு - முதலில் மாநகரசபைக் காணியைக் குறிவைத்திருந்தது.

மக்களதும், பொது அமைப்புக்களதும், அரசியற் கட்சிகளதும், விடுதலைப் புலிகளதும் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து - அத்திட்டத்தைக் கைவிட்ட படைத்தரப்பு -

- சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து கூப்பிடுதொலைவிலுள்ள யாழ்.கோட்டையையும், அதனையண்டிய பகுதிகளையும் இராணுவத் தளமாக்குவதற்கான திட்டத்தைத் தற்போது முன்வைந்திருக்கிறது.

இந்த மாற்றம் - வெறுமனே ஒரு காணியைவிட்டு இன்னொரு காணிக்கான மாற்றமாக உள்ளதேயொழிய, மக்களது எதிர்ப்புக்காளான படைத்தள அமைவிடத்திலிருந்து பெரியளவு மாற்றமெதனையும் கொண்டிருக்கவில்லை.

மக்களது ஆட்சேபத்தைத் தொடர்ந்து - படைத்தரப்பிலிருந்து, நமது திட்டத்தை மாற்றியமைக்கிறோம் என்ற பெயருக்காக இப்புதிய திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறதே தவிர -

மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த அடிப்படைக் காரணிகளில் எதனையாவது கருத்திற்கொண்டு, இப்புதிய திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதே தெளிவானது.

மாநகரசபைக் காணியில் படைத்தளம் அமைக்கப்படுவதால் - மக்களுக்கு ஏற்படக்கூடிய இடர்பாடுகளுக்கும், இடைஞ்சல்களுக்கும் எவ்விதக் குறைவுமில்லாத அதே புதிய திட்டத்தின்படி படைத்தளம் அமைக்க முற்படுவதுமாகும்.

இதுதொடர்பில் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ அனுப்பிய கடிதத்திற்குப் பதிலளித்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமது ஆட்சேபக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல - புதிய திட்டம் முன்னைய திட்டத்திற்கு மாற்றாகாத ஒரு அர்த்தமற்ற செயற்பாடு என்பதே இங்கு கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

மக்கள் குடிமனைகளிலிருந்து படைத்தளங்களை விலக்குவதற்கும், மீண்டும் குடிமனைகளுக்குள்ளும், மக்கள் கூடக்கூடிய பகுதிகளுக்குள்ளும் குடியமர்வதற்கும் எவ்வித வேறுபாடுகளும் இருக்கப்போவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டி விடுதலைப் புலிகள் தமது எதிர்ப்பை வலியுறுத்திக் கூறியிருக்கின்றனர்.

புதிதாகப் படைத்தளம் அமைப்பதற்கு இராணுவத்தரப்பு பிரேரிக்கும் பகுதியானது - யாழ். குடாநாட்டின் நிலப்பரப்பையும், தீவகத்தையும் இணைக்கும் பகுதியாகவிருப்பதுடன் யாழ்.தபால் நிலையம், கூட்டுறவுச் சங்கம், ரெலிகொம், வீரசிங்கம் மண்டபம், மீன்சந்தை, விளையாட்டரங்கு போன்ற மக்கள் கூடக்கூடிய இடங்களை மிக அண்மித்ததாகவும் இருப்பது - புதிய விளைவுகளையோ, சுமுக நிலையில் முன்னேற்றத்தையோ பெற்றுத்தந்துவிடப் போவதில்லை என்பதையும் விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

இராணுவத்தரப்பின் நோக்கத்தைப் பார்க்கும்போது- யாழ்.குடாநாட்டிலுள்ள முக்கியமான படைத்தளங்களைப்போல - நிரந்தரமான தளமொன்றை யாழ். நகரையண்டி அமைப்பதற்கே முஸ்தீபுகள் நடைபெறுவதாகக் கருதவேண்டியுள்ளது.

மக்களின் சுமுக நிலைக்கும் - இராணுவ பிரசன்னத்துக்குமான எட்டாப் பொருத்தத்தைப் புரிந்துகொள்ளாது, மக்களுக்கு இடைஞ்சல்களையும், பிரச்சினைகளையும் தருவதாக படைத்தளங்களை இடமாற்றுவதெனக் கொள்வது - சுமுக நிலையிலும், மக்களது இயல்பு வாழ்விலும் தங்கியிருக்கின்ற அமைதிக்கு ஆரோக்கியமானதல்லவே.

உயர்பாதுகாப்பு வலயங்களெனவும், மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலமைந்துள்ள படைத்தளங்களெனவும் - இராணுவத்தின் பிரசன்னம் குடாநாட்டில் தக்கவைக்கப்படுமாயின் - அது அமைதியும், சமாதானமும் என உதட்டளவில் பேசிக் கொண்டு, உண்மையில் - தமிழ்மக்களை இராணுவ வலயத்திற்குள், திறந்தவெளிச் சிறைக்கைதிகளாகவே வாழவைக்கும் ஒடுக்குமுறையைத் தொடர்வதாகவே இருக்கும்.

# கோட்டையில் முகாம் அமைப்பது அடிப்படை உரிமைகளை மீறும் செயல்

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ரணிலுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டைப் பகுதியில் இராணுவமுகாம் அமைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள், மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற - மக்களின் விருப்பத்துக்கு மாறான செயற்பாடு என்றும், இதைத் தடுத்து நிறுத்துமாறும் -

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தின் முழுவிபரமும் வருமாறு,

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி தங்களுக்கும், தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், மக்கள் மீள்குடியமர்வுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

அத்துடன், புதிய இராணுவமுகாம்களோ, படை நிலைகளோ அமைக்கப்படக்கூடாது. ஆனால், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிப் பதினாறு மாதங்கள் கடந்தநிலையிலும் பல லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அகதி முகாம்களிலும், புனர்வாழ்வு முகாம்களிலும் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றிச் சொல்லொணாத் துன்பங்களின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

நிலைமை இவ்வாறிருக்கையில், அவர்களது வாழ்விடங்களில் இராணுவம் முகாமிட்டுள்ளது. இராணுவத்தினரை- மக்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றி, மக்கள் மீளத் தமது சொந்த வீடுகளில் குடியமர ஆவன செய்யும்படி பல தடவை கோரியும் இன்னமும் அது நடைபெறவில்லை.

இந்நிலையில் யாழ்.நகரப்பகுதியில் மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் புதிய முகாம் அமைப்பது தொடர்பான சர்ச்சை படையினரால் கிளப்பப்பட்டு - மக்களின் எதிர்ப்பினாலும், தங்களது தலையீட்டினாலும் அது நிறுத்தப்பட்டது.

தற்போது தாங்கள் படைமுகாம் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ள பகுதியானது - மாநகரசபைக்குச் சொந்தமான காணியிலிருந்து ஏறத்தாழ 250 மீற்றர் தொலைவிலுள்ள கோட்டைப் பகுதியாகும் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இச்செய்தி மீண்டும் மக்கள் மத்தியில் அச்சத்தினையும், குழப்பத்தினையும், ஆத்திரத்தினையும் ஏற்படுத்திவிட்டுள்ளது.

படைமுகாம் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ள கோட்டைப் பகுதியானது - மக்கள் நடமாட்டம் மிக அதிகமான நகரப் பகுதியாகும். இதில் படைத்தளம் அமைவதனால் மக்கள் பல நெருக்கடிகளையும், இராணுவக் கெடுபிடிகளையும் சந்திக்க வேண்டிவரும்.

இப்பகுதியைச் சுற்றிய பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாவனையிலுள்ள வீரசிங்கம் மண்டபம், பொதுநூலகம், விளையாட்டு மைதானம், தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம், பொதுச்சந்தை, யாழ்.மாவட்ட விவசாய நுகர்வு கூட்டுறவுச் சங்க சமாசம், பிரபல இந்து ஆலயமான முனியப்பர் ஆலயம், யாழ். மத்திய கல்லூரி, சுற்றுலா விடுதி என்பன அமைந்துள்ளன.

அத்துடன் புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தின் கீழ் உடனடியாகப் புனரமைக்கப்பட்டு வரும் பிரதம தபாற்கந்தோர், சுப்பிரமணியம் பூங்கா, நீதிமன்ற வளாகம், மார்புச் சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத்தொகுதி என்பன அமையவுள்ளன.

அத்துடன் - அராலி, வட்டுக்கோட்டை பிரதான வீதியும், தீவகத்தினைக் குடாநாட்டுடன் இணைக்கும் பிரதான வீதியும் முழுமையாக மக்கள் பாவனையிலிருந்து துண்டிக்கப்படக்கூடிய அபாயநிலையுள்ளது.

மேற்சொன்ன புனரமைப்பு, புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் நிறுவப்படவுள்ள அனைத்துக் கட்டுமானப் பணிகளும் இதனால் தடைப்படக்கூடிய ஆபத்தான சூழ்நிலையுள்ளது.

அதுமட்டுமன்றி பண்ணைக் கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் பலநூற்றுக்கணக்கான மீனவர்களின் தொழில் முயற்சிகள் உடனடியாகப் பாதிப்புக்குள்ளாகக்கூடிய அபாயநிலையுள்ளது.

இதன் காரணமாகப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம யாழ்.கோட்டைப் பகுதியில் படைமுகாம் அமைக்கப்படுவதனை முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம்.

மக்களின் அடிப்படை மனித உரிமையை மீறுகின்ற, மக்களது விருப்பத்திற்கு மாறான இச்செயலால் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடக்கூடும்.

இது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்பதால், இது விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு முகாம் அமைக்கும் பணியைத் தடுத்து நிறுத்தவேண்டும் என மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம் இவ்வாறு அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புலிகளுக்கு ஆதரவாக இனிமேலும் பேசவேண்டும்

### அதற்காகவே எதிர்மனு என்கிறார் வைகோ

(சென்னை)

எதிர்காலத்திலும் இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசும் உரிமை வழங்கப்படவேண்டும். இதற்காகவே 'பொடா' சட்டத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருப்பதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் விசாரணைக்காக அழைத்துவரப்பட்டபோது, செய்தியாளர்களிடம் வைகோ பேசினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - பொடா சட்டத்தின் 21 ஆவது பிரிவு பேச்சுரிமையைத் தடுக்கின்றது. இதனை நீக்குவதன் மூலமே எதிர்காலத்திலும் புலிகளை ஆதரித்துப் பேச முடியும். இதற்காகவேதான் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன்.

கடந்த 55 வருட காலத்தில் இத்தகைய வழக்குகள் எதற்கும் உரிய தீர்ப்புக்கள் வழங்கப்படவில்லை. ஆனாலும், பொடா சட்டத்துக்கு எதிரான வழக்குத் தொடர்ந்து நடத்தப்படும்.

அத்துடன், தமிழகத்தில் ஆட்சியிலுள்ள ஜெயலலிதாவை அகற்றுவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் எனவும் வைகோ மேலும் குறிப்பிட்டார்.

# வயது குறைந்தோரின் திருமணம்; தடுக்க சட்டத்தை திருத்த முடிவு!

(கொழும்பு)

திருமணச் சட்டத்திற்கு முரணாக - வயது குறைந்த பெண்களைத் திருமணம் செய்வதைத் தடுப்பதற்கான நடைமுறைகள் குறித்து ஆராய மூவர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள், மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

திருமணச் சட்டத்தை ஏமாற்றி - அதற்கு முரணான வகையில் வயது குறைந்த பெண்களைத் திருமணம் செய்யும் சம்பவங்கள் அதிகரித்திருக்கிறது. இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராயவே மூவர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குழுவில் பதிவாளர் நாயகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் மற்றும் அமைச்சர் அலிக் அலுவிகாரவின் ஆலோசகர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவின் சிபார்சுகளில் - எந்தக் காரணம் கொண்டும் திருமண வயதை 18 இலிருந்து குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்றும் உளநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

போலியான சான்றிதழ்களைச் சமர்ப்பித்தும், உத்தியோகபூர்வ ஆதாரங்கள் இன்றியே திருமணப்பதிவுகளைச் செய்துகொள்ளக்கூடிய நிலையை மாற்றியமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

15 வயதுக்குட்பட்ட சிறார்களுடன் பெற்றோர்களின் அனுமதியுடன் திருமண உறவு வைத்துக்கொண்டாலும், அது பாலியல் துஷ்பிரயோகமாகவே கருதப்படும்.

ஆனால், முஸ்லிம்களுக்கு திருமண வயது 12 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது முரண்பாடுகளைத் தோற்றுவித்திருப்பதாகவும் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

உளவியல், மருத்துவ காரணங்களை முன்னிட்டு திருமண வயதெல்லையைக் குறைக்கக்கூடாதெனக் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இளவயதுத் திருமணங்களைத் தவிர்க்க பாடசாலை மாணவர்கள் மத்தியில், குறைந்த வயதில் திருமணம் செய்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்து பிரசாரங்களை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

16 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்களே வயது குறைந்த திருமணத்தில் நாட்டமுள்ளவராக இருக்கின்றனர். இவர்கள் பெற்றோரின் அனுமதியின்றியே போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து திருமணப்பதிவுகளைச் செய்கின்றனர்.

இதனால், திருமணச்சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமானது என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் அறிக்கை கிடைத்ததும், நாடாளுமன்றத்தில் அதைச் சமர்ப்பித்துச் சட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்தார்.

# இராணுவத்தில் அதிகளவு முஸ்லிம்கள் சேர்க்க அஷ்ரப் காங்கிரஸ் கோரிக்கை!

### பிரதமர் ரணிலுக்கு கடிதம்

முஸ்லிம்களை அதிகளவில் இராணுவத்தில் சேருமாறு கேட்டுக்கொண்டுள்ள அஷ்ரப் காங்கிரஸ் கட்சி - முஸ்லிம்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

அஷ்ரப் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சுபைர்தீன் - இது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

மூதூர், தோப்பூர் போன்ற சம்பவங்கள் இனிமேலும் நடக்காமல் தடுப்பதற்கே முஸ்லிம் இளைஞர்களை அதிகளவில் இராணுவத்தில் சேர்க்குமாறு அவர் பிரதமரிடம் கேட்டுள்ளார்.

அத்துடன், தமிழ்க் கிராமங்களை அண்டியுள்ள முஸ்லிம் கிராமங்களில் கூடுதல் பாதுகாப்பை அரசாங்கம் வழங்க வேண்டும். முஸ்லிம் கிராமங்களில் - இராணுவ மற்றும் ஊர்காவற்படை நிலையங்களையும் அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுள்ள சுபைர்தீன் -

மூதூர், தோப்பூர் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசிய உதவிகளை வழங்க உடன்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

# நல்லாசிரியர்களை உருவாக்கும் பணியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாவது ஆண்டு பூர்த்தி இன்றாகும்

கல்வியில் சம வாய்ப்பு (Equal facilities for education) என்பது பொதுவாக உலகக் கல்விச் செல்நெறியாகவுள்ளது. ஆனால், இலங்கையில் கொள்கையளவில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டாலும், பல்வேறு பின்னணித் தாக்கங்களினூடு பிரச்சினைகளின் மையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

குறிப்பாகத் தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்குப் பகுதியில் அரசியல் கல்வி, சமூக, பொருளாதார யதார்த்த நிலைகளை விடுத்து, தென்னிலங்கையில் அரசியல் முன்னுரிமைகளையும், இலாபங்களையும் பெற அரசாங்கங்கள் முனைந்தபோது பிரச்சினைகள் மேலும் மோசமாகின.



சர்வதேச கல்வி நிபுணத்துவ ஆலோசகர் எலிசா போஸ், ஆசிரிய கல்வியியலாளர்களுக்கான கல்விச் செயலமர்வை கல்லூரியில் மேற்கொள்கின்றார்.

அரச மூல ஒதுக்கீட்டில் காட்டப்பட்ட பாரபட்சம், ஏற்றத்தாழ்வுகள், கல்வித்துறை ஒதுக்கீட்டுக் குறைபாடுகள், யுத்த சூழ்நிலைகள் தமிழர்களின் கல்வியில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

கல்வி மூலமாகத் தேசத்தைக் கட்டியெழுப்பலாம் என்ற கோட்பாடு கல்வியை அழிப்பதன் மூலம் தேசத்தை அழிக்கலாம் என்ற நடைமுறை உத்திக்கு வழிகோலியது. அழிவுகளிலிருந்து மீட்சிபெற விரைவான புதிய கல்வி முகாமைத்துவ செயல்நிலை ஆய்வுகளை, பிரச்சினைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்துவதுடன், கல்வியின் மூல அச்சாணிகளான ஆசிரியர்கள் விழிப்புடனும், அர்ப்பணிப்புடனும், எழுச்சியுடனும் தமது கடமையை ஆற்றுவதன் மூலமே தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும்

கல்வியில், கற்றலில் சம வாய்ப்பை ஆசிரியர்களினாலேயே வழங்கமுடியும்.

மேற்குறிப்பிட்ட உணர்வுகளையும், பாதிப்புக்களையும் எமது ஆசிரியர்கள் உள்வாங்கி, எம் சொத்துக்களான மாணவர்களுக்குப் புதிய எழுச்சியுடனும், முகாமைத்துவத்திறனுடனும் கல்வியை வழங்கவேண்டும்.

கல்வி முறைமையில் ஆசிரியர் ஒரு பலவீனமான ஊழியர்' என்ற நிலையை நீக்கி, தமது வாண்மையை விருத்தியாக்கவேண்டும். இதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆசிரிய கலாசாலைகளின் - ஆசிரிய வாண்மை அமைப்புகள் மற்றும் ஆசிரிய தொழிற்சங்கங்கள் புதிய வழிகளைக் காணவேண்டும். ஒவ்வொரு பாடசாலைகளிலும் கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க கல்வியியல் ஆய்வுப் பிரிவுகளை உருவாக்க வேண்டும்.

கல்வியிடம் மேலும் பல கடமைகளையும், அபிலாசைகளையும் எமது தேசம் எதிர்பார்க்கின்றது. இதற்கமைய இளம் ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவப் பயிற்சிகளையும், வெளியீடுகளையும் ஏற்படுத்த வேண்டும். கல்வியியல் பிரச்சினைகளைச் சரியாக இனங்காண வேண்டும்.

இந்த வகையில்தான் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நீண்டகால வேண்டுகோள்களுக்குப் பின்னர் 2000 ஆம் ஆண்டு மே 2 ஆம் திகதி கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒருபகுதியில் ஆரம்பமானது.

இட நெருக்கடி, வகுப்பறைகள் போதாமை, அடிப்படைவசதிகள் அற்ற நிலையில் பீடாதிபதியோ, உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்களோ, ஆசிரிய மாணவர்களோ மனம் கோணாது அர்ப்பணிப்புடன் கல்லூரியை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்கின்றனர்.

இன்று தனது சொந்தக் கட்டடத் தொகுதியில் இயங்கிவரும் இக் கல்லூரியில் நான்காவது அணி ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப் பட்டுள்ளனர்.

ராக்கிங் என்ற இழிசெயல் இங்கு இல்லை. தேசப்பற்றுடன் ஆசிரிய மாணவர்கள் ஒருங்கிணைந்து பல கல்விச் செயற்திட்டங்களையும், செயல்நிலை ஆய்வுகளையும் யாழ், மாவட்டப் பாடசாலைகளில் மேற்கொண்டுவருகின்றனர்.

இலங்கையிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான முதன்மை வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டத்தில், முதன்மையான கல்லூரியாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் சென்ற ஆண்டு ஒரு மாணவிக்கும், இரு விரிவுரையாளர்களுக்கும் வெளிநாட்டில் குறுகியகால புலமைப் பரிசில் கிடைத்தது.

கற்பிக்கும் நிலையிலிருந்து கற்கும் நிலைக்கு மாணவர்களை நகர்த்துவதற்கான உபாயங்களை முன்னெடுத்தல், வகுப்பறைக்குள் பிரவேசிக்கு முன் நல்லாசிரியருக்குரிய பண்புகளையும், தேர்ச்சிகளையும் பெறுதல், தேசத்தைக் கட்டியெழுப்பும் அர்ப்பணிப்பும், தியாகமும் கொண்ட இளம் ஆசிரியர்களை உருவாக்குதல் போன்றன தேசிய கல்வியியற் கல்லூரிகளின் நோக்கமாகும்.



முதலாம் ஆண்டு நிறைவு விழாவில், பிரதம ஆணையாளர் கல்லூரிக் கொடியை ஏற்றுகிறார்.

நற்பண்புகளை ஊட்டுதல், மாணவர்களைக் கற்கத் தூண்டுவதற்குப் பொறுப்பாகவும், காரணம் காட்ட வேண்டியவர்களாகவும் இருக்கும் ஆசிரியர்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன் சேவை ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டம் விருத்திசெய்யும். இதை நோக்கமாகக் கொண்டு ஆசிரிய கல்வியியலாளர்களும், ஆசிரிய மாணவர்களும் ஒன்றுசேர்ந்து பிரச்சினைகளைப் பகுத்தாய்வு செய்து, சிக்கார்ந்த கற்றல் - கற்பித்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முற்படுவர். இந்த அறைகூவல் காரணமாக ஆசிரிய கல்வியியலாளர்கள் பயனுறுதி வாய்ந்த கற்பித்தல் உத்திகளைக் கையாண்டு கற்பிப்பதுடன் - கல்விக் கோட்பாடுகள், யதார்த்த நிலைமைகள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதையும் உறுதிப்படுத்துவர்.

முன்சேவை நிகழ்ச்சித் திட்டக் கூறுகளுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமும் - கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவரிடையே கூடிப் பணியாற்றும் தன்மை மூலமும் இத்தகைய ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டம் பிரதிபலித்து தேசப்பற்றுள்ள நல்லாசிரியர்களை உருவாக்கும். இன்றைய உலகில் மாற்றங்கள் துரிதகதியில் ஏற்படும்போது கடந்தகால எடுகோள்கள், நோக்கங்கள் என்பன பெறுமதியற்றதாகின்றன. பழைய அனுபவங்கள் பயனற்றுப் போகின்றன.

பழைய அறிவுத் தொகுதியில் நாட்டம் குறைகின்றது. கடந்தகால நிகழ்வுகள் எதையும் நாம் மாற்றியமைக்க முடியாது. ஆயினும், நிகழ்காலம் கருத்துடையது என வலியுறுத்தி - எதிர்காலம் பற்றிய மாற்றுத் திட்டங்களைக் கல்வி முறைமூலம் முன்வைக்கலாம்.தேசத்தைக் கல்வி மூலம் கட்டியெழுப்பமுனையும் ஒரு புதிய புரட்சிகர சமுதாயம் முதலில் எதிர்காலவியல் பற்றி ஆய்வுகளை விஸ்தரிக்கும்.

**பா.தனபாலன்**
உபபீடாதிபதி (கல்வி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# மூன்றுநாள் காய்ச்சலில் சிறுமி பரிதாப மரணம்

மூன்றுநாட்களாக காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த 14 வயதுச் சிறுமி ஒருவர் மரணமடைந்தார்.

தொடர் தலையிடி, காய்ச்சல் காரணமாகக் கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி சிகிச்சை பலனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

மண்டைதீவைச் சேர்ந்த மரியதாஸ் அமலினி (வயது 14) என்னும் சிறுமியே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணைகளை ஊர்காவற்துறைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதேவேளை, பலவருடங்களுக்கு முன்னர் இவரது சகோதரிகள் இருவர் மூளைக்காய்ச்சலினால் இறந்ததாகச் சிறுமியின் தாயார் தெரிவித்தார். (சு)

# சமாதான காலத்திலேயே புலிகள் நன்மை பெறுகின்றனர்

## ஜே.வி.பி பொதுச் செயலர் ரில்வின்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் தந்திரோபாயமாகவே சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொண்டுள்ளனர் என ஜே.வி.பி குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொள்வதாக எடுத்த தீர்மானம், இது குறித்து அனுப்பிய கடிதம், இதனையடுத்து எழுந்துள்ள அரசியல் கருத்துப் பரிமாற்றங்களை நோக்கும் போது - வேண்டுமென்றே பேச்சுக்களிலிருந்து விலகுவதான தீர்மானங்களைப் புலிகள் எடுத்துள்ளனர் எனப் புலப்படுகிறது.

புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொள்வார்கள் என நாம் நம்பவில்லை. ஏனென்றால் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொள்ளக்கூடிய எந்த நிலைமையும் புலிகளுக்கு ஏற்படவில்லை. யுத்தத்தில் பெற்ற நன்மையையும் விட சமாதான காலத்தில் அவர்கள் கூடுதலான அனுகூலங்களைப் பெற்று வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# கரவெட்டியில் மீளக்குடியேறியோருக்கு ஞாயிறன்று ரூ. 25 ஆயிரம் கொடுப்பனவு!

வன்னியிலிருந்து ஏ-9 பாதையால் வந்து, கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மீளக் குடியேறிய குடும்பங்களுக்கான ரூபா 25,000 கொடுப்பனவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் கீழ்க்குறிக்கப்பட்ட இடங்களில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து ஜே/360, ஜே/375, ஜே/377, ஜே/378, ஜே/379, ஜே/380, ஜே/381 ஆகிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள மீளக்குடியேறியோருக்குக் கொடுப்பனவு வழங்கப்படும்.

சமுர்த்தி வலயம்- 1 உடுப்பிட்டியில் - ஜே/352, ஜே/353, ஜே/354, ஜே/355, ஜே/356, ஜே/357, ஜே/358, ஜே/359, ஜே/361 கிராம அலுவலர் பிரிவிலுள்ள மீளக்குடியேறியோருக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சமுர்த்தி வலயம்- II நாவலர் மடத்தில் வைத்து - ஜே/348, ஜே/349 ஜே/350, ஜே/351, ஜே/362, ஜே363, ஜே/364, ஜே/365, ஜே/366, ஜே/382 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மீளக்குடியேறியோருக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சமுர்த்தி வலயம் - III துன்னாலையில் - ஜே/367, ஜே/368, ஜே/369, ஜே/370, ஜே/371, ஜே/372, ஜே/373, ஜே/374 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மீளக்குடியேறியோருக்கும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனக் கரவெட்டி பிரதேச செயலர் க.சிவபுண்ணியம் தெரிவித்தார். (116)

# நூலகத்தை அடுத்த வாரம் திறப்பதற்கு ஆலோசனை

யாழ். பொதுநூலகத்தினை எதிர்வரும் 7 ஆம் திகதி புதன் கிழமை திறப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபை ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

இந்த நூலகத்தின் நிர்மாண வேலைகளை மேற்கொண்டுவரும் கட்டடத் திணைக்களம் பகுதி பகுதியாகவே வேலையைப் பூர்த்தி செய்து வருகின்றது. இன்னமும் முழுமையாக நிர்மாணத்தினை முடித்து, நூலகக் கட்டடம் யாழ். மாநகரசபையிடம் ஒப்படைக்கப்படவில்லை.

இந்த வாரத்துக்குள் கட்டடத்திணைக்களம் நிர்மாண வேலையை முழுமையாக முடிக்குமாயின், நூலகத்தினை சம்பிரதாய முறைப்படி யாழ். மாநகரசபை திறக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (13)

# வரதர் அணி அலுவலகம் மீது திருமலையில் கிரனேட் வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை சீவியூ வீதியில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் இரவு 8.10 மணியளவில் கிரனைட் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோவில் வந்த இனந்தெரியாதவர்களே மேற்படி தாக்குதலை நடத்தியதாக அலுவலகத்தின் பொறுப்பாளர் தயாபரன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலினால் எவருக்கும் காயங்கள் ஏற்படாதபோதும், அலுபலகத்தின் முன்பகுதி சேதமடைந்துள்ளதாகவும், தற்போது அலுவலகத்திற்குப் பொலிஸ் பாதுகாப்பு அதிகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (10)

# மீள்குடியமர்ந்தோர் நிதிக் கொடுப்பனவு சாவகச்சேரிக்கு முன்னுரிமையில்லை

## அப்பகுதி மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி பிரதேசத்தில், மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு முன்னுரிமைப்படுத்தி வழங்கப்படாதது குறித்து இப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த காலத்தில் தமது சொந்த இடத்தில் சென்றுவாழ விரும்பும் மக்கள் எதுவித அடிப்படை வசதியுமின்றி நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில், அரசாங்கத்தினால் வழங்கப்படும் இந்தச் சிறுதொகையைக்கூட அவர்கள் பூரணமாகப் பெற முடியாமலுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட 7968 குடும்பங்களில் இதுவரை 4 ஆயிரம் குடும்பங்களிற்கு மட்டும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 3968 குடும்பங்களிற்கு இன்னமும் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

மொத்தம் 40 ஆயிரம் மீள்குடியமர்ந்த குடும்பங்கள் இந்த நிதியைப் பெறக்காத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ரா)

# மாபெரும் மேதினப் பேரணியிலிருந்து.....





















தேசியக் கொடியேற்றும் யாழ். அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்



ஈகச் சுடரேற்றும் - அருட்தந்தை



இந்துமத சிவாச்சாரியார்



சிவாஜிலிங்கம் எம்.பி



மாவீரரின் தாயொருவர்



யாழ். அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி



பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில்



கூட்டமைப்புப் பிரமுகர்கள்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழருக்கான அபிவிருத்தி நிதி தெற்கிற்குத் திருப்பப்படுகின்றது!

## எச்சரிக்கிறார் சுரேஸ் பிறேமச்சந்திரன்



உயர்பாதுகாப்பு வலயத்தில் பொதுமக்களை மீளக்குடியமர்த் தாது, வடபகுதி மக்களின் அபிவி ருத்திக்காக அனுப்பப்படும் உதவி கள் யாவும் - தென்பகுதி மக்களின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

- இவ்வாறு நேற்று யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி மைதானத் தில் நடைபெற்ற மே தினக்கூட்டத் தில் உரையாற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகம் சுரேஷ் பிறேமச் சந்திரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில், நாம் வெறுமனே இங்கி ருந்து ஆக்ரோஷங்களை எழுப்பு வது மட்டுமல்ல, இலங்கை அரசாங் கத்துக்கு சில விடயங்களை திட்ட வட்டமாக இந்த மே தினத்தினூடு கூற விரும்புகிறோம் என்பதுதான் உண்மையான பொருள்.

இன்று, அரசாங்கம் பொருளாதார ரீதியாக மிகவும் மோசமான நிலை யில் இருக்கின்றது. தமது அரச இயந்திரத்தைக் கொண்டுநடாத்த முடியாத நிலையில், வெளிநாட்டி லிருந்து அவர்களுக்கு கடன் கிடைத் தால் தவிர, அரசாங்கத்தை நடத்த முடியாது. இந்த அரசாங்கத்தை கொண்டு நடத்துவதாக இருந்தால், தமிழீழ விடுதலைப் புலிகளிலேயே அவர்கள் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் கூட்டாக ஜப்பானுக்குச் சென்று, விடுதலைப் புலிகள் குரல் கொடுத்தால் மட்டுமே பணம் கிடைக்கும். அந்தப் பணத்தை வைத்துத்தான் இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என அரசு நம்புகின்றது. எனவே, அவர்க ளுக்கு விடுதலைப் புலிகள் தேவை யாக இருக்கின்றனர்.

தமிழ் மக்களாகிய நாங்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண் டும். இந்த நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து எம்மை தாழ்த்தும் செயற்பாட்டையே ஆட்சிக்கு வரும் எல்லா அரசாங்கங்களும் செய்து வந்தன. இவ்வாறான செயற்பாடு களுக்கு நாம் இனியும் அனுமதிக் கக்கூடாது என்றார்.

(லி,சு.ரா)

# எம்மிடையே பிளவு, குழப்பத்துக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது

## மாவை சேனாதிராஜா எம்.பி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

புலிகள், மிகவும் பலமாக பேச்சு வார்த்தை மேசையிலே இருக்கின்ற னர். விடுதலைப் புலிகளின் அந்தப் பலம் ஜனநாயக ரீதியிலானது மட்டு மல்ல, ஆயுத ரீதியானதும் கூட. சிங்கள தேசத்தினாலே சமமாக மதிக்கப்படுகின்ற இத்தகைய பலம், எந்தவகையிலும் பலவீனப்படுத்தப்பட முடியாதது என தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற மாவை சேனாதிராஜா நேற்று மே தினப் பேரணியில் உரை யாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் - போர்நிறுத்தம் செய்யப்பட்டு, ஆயு தம் கீழே வைக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், ஜனநாயக ரீதியாக சர்வ தேச சமூகத்தின் மத்தியஸ்தத்து டன் பேச்சுவார்த்தை நடாத்தப்படு கின்ற வேளையில், தமிழீழ விடு தலைப் புலிகளுக்குப் பின்னால் நாம் அணிதிரள வேண்டும். பிளவுகளுக் கும் குழப்பங்களுக்கும் எங்கள் மத் தியிலே இடமளிக்கக்கூடாது என்ப தில் நாம் அனைவரும் உறுதியோடு, ஒற்றுமையாக இருக்கவேண்டும்.விடு தலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அனுப்பியுள்ளோம். தமி ழீழ விடுதலைப் புலிகளுடன் பேசித் தான் இந்த நாட்டினுடைய இனப்பிரச சினைக்கு, தமிழ்பேசும் மக்களினு டைய பிரச்சினைக்குத் தீர்வுகிட்டும்.

தமிழ் பேசும் மக்கள், ஜனநாயக ரீதியாகவும், ஆயுதரீதியாகவும் பேச் சுவார்த்தை மேசையிலே சமபல மாக இருப்பதை நிரூபிக்க உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். சந்தி ரிகா பண்டாரநாயக்கவும், ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளும் திரண்டு நின்று இந்தப் பேச்சுவார்த் தையை குழப்பவும், விடுதலைப் புலி களையும், தமிழ்பேசும் மக்களையும் பலவீனப்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போரை - பயங்கரவாதப் போர் எனக் குறிப் பிட்டு அழித்துவிடவும் முயற்சிக்கிறார் கள்.

தமிழ் பேசும் மக்களாகிய நாம், விடுதலையை அழியவிடக்கூடாது. இந்தப் பேச்சுக்களினால் தமிழ் பேசும் மக்களின் இயல்பு வாழ்க்கை மீளக்கொண்டுவரப்பட வேண்டும். ஆனால், இராணுவம் அதற்கு தடை யாகவுள்ளது. இயல்பு வாழ்க்கை ஏற்படுவதற்குப் பதிலாக - மேலும் மேலும் புதிய இராணுவ முகாம் களை அமைத்துக்கொண்டு வருகின் றனர். யாழ்ப்பாணத்திலே 30 சதவீத பிரதேசங்களை - கரையோர, விவசாய நிலங்களை இராணுவம் தன்னுடைய அரசாங்கத்தின் கட்டளையின்றி உயர்பாதுகாப்பு வலயம் என பிரக டனம் செய்து மக்களை அகதி முகாம்களில் வாழவைத்துள்ளது.



இந்த நாட்டினுடைய இராணுவம் நூற்றுக்கு நூறு சிங்களமயமானதா கும். அரசியல்மயமான இந்த இரா ணுவம் எங்களுடைய மண்ணை ஆக்கிரமிக்கவிடமுடியாது என்றார்.

## எங்கள் ...

அடிமைத்தளை ஒட்டுமொத்தமாக உடைத்தெறியப்படும், நொறுக்கப்ப டும், தூள் தூளாக்கப்படும் அந்தப் புதிய அத்தியாயத்துக்கான ஒரு அறிகுறி இன்று உருவாவதை சர் வதேச சமூகம் உணர்ந்துகொண்டி ருக்கின்றது.

இத்தனை காலமும் ஒருவரோடு ஒருவர், பல்வேறு காரணங்களுக் காகவும் மோதிக்கொண்டிருந்த தமிழ ரின் நிலைமை போய் - பல்வேறு அரசியல் சக்திகளும் இன்று ஒரே கொடியின் கீழ், ஒரே சக்தியின் கீழ், ஒரே தலைவரின் கீழ் எப்படி ஒன்று பட்டார்கள் என்பதை உலகம் உணர வேண்டும்.

இன்றைக்குச் சமாதானப் பேச்சு வார்த்தை இடைநிறுத்தம் செய்யப் பட்டிருக்கின்றது. ஒரே நிலைப்பாட் டிலே தமிழினம் உறுதியாய் நின்று கொண்டிருக்கின்றது. சிங்கள் தேசம்- இந்த இலங்கைத் தீவு இரண்டாக உடையக்கூடாதென்று விரும்பினால், இத்தீவு தொடர்ந்து ஒரே நாடாக அரசியல், நிர்வாகரீதியாக இருக்க வேண்டுமென்று விரும்பினால் - இது அவர்களுக்கான கடைசிச் சந்தர்ப் பமாக இருக்கும்.

எமது பிறப்புரிமையான சுயநிர் ணய உரிமை என்ற அடிப்படையில், மக்கள் உரிமை சாசனத்தின் அடிப் படையில், சர்வதேச சட்டத்தினால்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## படைமுகாமின்...

வீதிக்கு மிக நெருக்கமாக இடத்தில் காணப்படுவதோடு - தபாலகம், யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், ரெலிகொம், வீரசிங்கம் மண்டபம், மீன்சந்தை, விளையாட்டு அரங்கு போன்ற பொதுமக்கள் கூடும் இடங் களுக்கு நெருக்கமானதாகவும் காணப்படுகிறது.

மேலும், யாழ். குடாநாட்டைச் சேர்ந்த உள்ளகரீதியாக இடம் பெயர்ந்த குடும்பங்கள், அவர்களது வழமையான வாழ்விடங்களுக்கு செல்வதற்கானதும், சென்று மீளக் குடியேறுவதற்குமான அனுமதியைப் பெறுவதில் சொல்லொண்ணா நெருக்கடிகளுக்கு முகம் கொடுத் துவரும் அதேவேளை - தமது இயல்புநிலைக்கு அப்பாற்பட்ட அன் றாட வாழ்க்கையைத் தொடர்வதிலும் கஷ்டங்களை அனுபவித்து வருகின் றன. இந்த நெருக்கடி நிலை ஏற் படுவதற்கு தங்கள் அரச படைகளின செறிவு விகிதாசாரமே முழுக் கார ணமாகும்.

போர்நிறுத்த உடன்படிக்கை யின் உள்ளடகத்தின்படி மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இரா ணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும். ஆனால், தங்களது திட் டம், போர்நிறுத்த உடன்பாட்டுக்கு பொருத்தமற்றதாக இருப்பதோடு, வழமை நிலைமையை மீளக் கொண்டுவருவதற்கு எதிரானதாக வும் இருக்கிறது.

ஏற்கனவே முதலில் தாங்கள் பிரேரித்த திட்டம், மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பைச் சம்பாதித் தது. அதுபோன்றே தற்போதைய உங்கள் திட்டமும் பொதுசன எதிர்ப்பை ஏற்படுத்துமென நாங்கள் அச்சமடைவதையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும்.

இந்த விவகாரம், மக்கள் மனங் களில் விரக்தியைத் தோற்றுவிப் தோடு, நாங்கள் முயற்சித்துவரும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் இலட்சியத்துக்கு எதிரானது என்ப தையும் நீங்கள் ஏற்றுக்கொள்வீர் கள். அத்துடன், அது - நம்பிக்கை யைக் கட்டியெழுப்பும் தொடர்பில் எமது உறுதியான நோக்கங்களுக்கு மாறான போக்கில் இட்டுச்செல்லவல் லது என்பதனையும் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றேம். எனவே, போர் நிறுத்த உடன்படிக் கைக்கு ஏற்புடையதாகவும், இயல்பு நிலையைக் கொண்டுவருவதற்கான பல்வேறுபட்ட பரிந்துரைப்புகளுக்கு ஏற்புடையதாகவும் - தங்களின் தற் போதைய புதிய திட்டவரைபை, மீள்பரிசீலனை செய்யும்படி தங் களை வேண்டிக்கொள்ளுகின்றேம்.

குடிசன செறிவுமிக்க இடங்களி லிருந்து இராணுவத் தளங்களை இடம்மாற்றுவது விரைவுபடுத்தப் படுவதே பாராட்டுக்குரியதாக இருக் கும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்லாயிரக்கணக்கானோர்...

முஸ்லிம் மத குருமார்களும், தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களும் மற்றும் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தோரும், பொது அமைப்புக்களின் தலைவர் களும் பேரணியாகச் சென்றனர்.

ஊர்திகளில் - தேசியத் தலை வரின் பாரியளவிலான உருவப்படத் தையும், தமிழீழ தேசியக் கொடி யையும் தாங்கிய கப்பல் போன்ற வடிவமைக்கப்பட்ட ஊர்தி நகர்ந் தது. தொடர்ந்து, பல்வேறு அமைப் புக்களால் வடிவமைக்கப்பட்ட ஊர் திகளும், இவற்றோடு முச்சக்கரவண் டிகள் பலவும் பேரணியாக வந்தன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரும் எழுச்சியுடன் கலந்துகொண்ட இப்பேரணியில் பங்கேற்ற பெரும் பாலானோர், தேசியத் தலைவர் பிர பாகரனின் உருவப்படத்தைத் தாங் கியவாறு 'எமது தலைவர் பிரபா கரனே', 'எமது தேசம் எமக்கு வேண்டும்', எனப் பல்வேறு கோஷங் களை எழுப்பியவாறு சென்றனர்.

பேரணி சென்ற பாதைகளில் நூற்றுக்கணக்கான பொலிஸார் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இப்பேரணி மாலை 4.15 மணி யளவில், யாழ். மத்திய கல்லூரி மைதானத்தை வந் தடைந்தது. இங்கு, கிராமசேவையாளர் சங்கத் தின் முன்னாள் தலைவர் க.சிவராசா தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம் பமாகியது. பேரணி, கல்லூரியை வந்தடைந்தபோதும் - பேரணி ஆரம்பமான இடத்திலிருந்து மக்கள் சாரிசாரியாக மத்திய கல்லூரி நோக்கி வந்தவண்ணமே இருந்தனர்.

பொதுக்கூட்ட ஆரம்பத்தில் - பொதுச்சுடரினை கிறிஸ்தவ, இந்து முஸ்லிம் மதப் பெரியார்களும் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நாடா ளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங் கம், யாழ். மாவட்ட பொதுஅமைப் புக்களின் ஒன்றியத் தலைவர் சோலமன் சிறில் மற்றும் மாவீரர் கள் இருவரின் பெற்றோரும் ஏற்றி வைத்தனர். பின்னர் அகவணக் கத்தைத் தொடர்ந்து, க.சிவராசா தலைமையுரையாற்றினார்.

பின்னர் - தமிழ் தேசியத்தின் கூட்டு மேதின பிரகடனம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவரால் வாசிக்கப்பட்டது. இதனை நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருவர் முன்மொழிய, இன்னுமொருவர் அதனை வழிமொழிந்த அதனை பிரகடனப்படுத்தினர்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசி யற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா, தமிழ்க் கூட்டமைப்பு பிரமுகர்களான சுரேஸ் பிறேமச்சந்திரன், சி.வி.கே. சிவஞா னம், யாழ்மாவட்ட விவசாய சம்மேளனச் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலை வர் ப.கனகலிங்கம், யாழ். பல் கலைக் கழகக் மாணவர் ஒன்றியத் தலைவர் பரணிதரன், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி ஆகியோர் உட்படப் பலரும் உரையாற்றினர்.

## இனவாத...

எங்கள் மக்கள் மீது இனவாத யுத் தம் கட்டவிழ்த்துவிடப்பட்டு, அவர் களின் வாழ்க்கை சின்னாபின்ன மானது, எங்களுடைய மக்களின் வலிமைபொருந்திய உழைக்கும் கரங்கள், வலிமை பொருந்திய மனங்கள், அவர்களால் உருவாக் கப்பட்ட பொருளாதார வளம் என்பன வெல்லாம் சிதைக்கப்பட்டு, எங்களு டைய மக்கள் மிகமோசமான, பரி தாபமான முறையில் வறுமையாளர் களாக்கப்பட்டனர்.

எங்களுடைய மக்கள், அவர்கள் மீது சுமத்தப்பட்ட இனவாத யுத்தம் மூலமே வறுமைக்குரியவராக்கப் பட்டனர் என்றார். (சு,லி,ரா)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30
CROUCHING TIGER HIDDEN DRAGON
இரவு 9.30 இற்கு மட்டும்
(சி-883)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், ரம்பா நடித்த
என்றென்றும் காதல்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
CHINA STRIKE FORCE
(சி-882)

## ஒன்றுதிரண்ட வெளிப்பாடு...

அவர் தொடர்ந்து கருத்து வெளி யிடுகையில் - எங்களில் 17,556 மாவீரர்கள் மடிந்தார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் மடிகின்றபோது, அவர்களது எண்ணங்களும், எதிர் பார்ப்புகளும் - எமது மக்கள் ஒன்று படுவார்கள், அவர்களுக்குச் சுதந் திரம் கிடைக்கும் என்றே இருந்தன. அம் மாவீரர்களின் கனவு நனவா வதை இங்கு நாம் பார்க்கக்கூடிய தாக இருக்கிறது.

இது தமிழருடைய தாயகப் பூமி என்று சொல்கின்றபோது -எங்க ளின் முடிவு என்பது மக்களின் தீர் மானமேதான். மக்கள் தீர்மானமே, எங்களது தீர்மானமாக இருக்கும். எனவே, இந்த விடுதலைப் போராட் டம், மக்கள் ஒவ்வொருவருடைய உணர்விலிருந்தும் உந்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டம்.

எமது மக்கள், தங்களைத் தாங் களே ஆளுகின்ற ஒரு வாழ்க் கையை பெறுவதென வருகின்ற போது - அதைப் பெறுகின்ற வரையில் - உறுதியுடன் போராடு வதும், அதற்காக ஒன்றுதிரண்டு நிற்பதும் நிச்சயமாக நடைபெற்றே தீரவேண்டியவையாகும்.

பேச்சிலிருந்து புலிகள் விலகி யிருக்கின்றார்கள் என்றால், அது எமது மக்களுடைய ஆதங்கத்தை யும் உணர்வையும்தான் வெளிப்ப டுத்துகிறது. விடுதலைப் புலிகளின் உணர்வு, மக்களின் உணர்வாகவே இருக்கின்றது.

எனவே, எமது மக்களை கிள் ளுக்கீரையாக நினைத்து அல்லது எமது மக்களைப் புறந்தள்ளி - யாரும் தமிழர்களை ஏமாற்றிவிட முடியாது. ஏனெனில், எமது மக்கள் தங்களைத் தாங்களே ஆளவும் தீர் மானிக்கவுமான பலத்தினைக் கொண் டிருக்கிறார்கள்.

தமிழர்களது வாழ்வும், எதிர்கால மும், புலிகளுடைய இராணுவப் பலத்திலேதான் தங்கியிருக்கின் றது. எனவேதான், ஒவ்வொரு தமிழனும் தன்பட்டறிவினால், தமிழர் களது சேனையைப் பலப்படுத்துகின் றான். தன் வாழ்வின் முதற்தேவை யாக அதைக் கொண்டிருக்கின்றான். மக்கள் இவ்வாறு இருப்பதனால் தான் புலிகள் பலமாக இருக்கின் றார்கள். இன்னும் பலமடைந்து வரு கின்றார்கள். அத்தோடு - இன்னும் பலத்தை அதிகரிக்க, தமிழர்கள் ஒன்றுபடுவார்களேயானால் தமிழர் களது இலக்குமுன்னேறும்.

தமிழர்களை யாரும் புறந்தள்ளி விட முடியாது. யாராவது புறந்தள்ள முற்படுவார்களேயானால், பாதிப்பு தமிழர்களுக்கு இருக்காது, தமிழர்க ளைப் புறந்தள்ளுவோருக்கான தாகவே இருக்கும்.

ஒரு இனம் இராணுவ பலத்தை யும், அரசியற்பலத்தையும் கொண் டிருக்கின்றபோது - பொருளாதார வளமும், வாழ்வின் அடித்தளமும் வளம்பெற்று மேன்மையடையும். அந்த வாழ்வின் மேன்மைக்காகத் தான் நாங்கள் இங்கே ஒன்றிணைந் திருக்கின்றோம்.

ஆனையிறவு வெற்றியை நாம் கருத்திற்கொண்டால் - எமது கைகளில் அது வீழும் வரை தமி ழர்களது எழுச்சியானது - கேள்விக் குறியானதாகவே இருந்தது. ஆனால், ஆனையிறவு வீழ்ச்சி என்பது - இனி மேல் தமிழனை வீழ்த்தமுடியாது, தமிழன் வெற்றியைப் பெற்றே தீரு வான் என்பதை எடுத்துக்காட்டியுள் ளது.

விடுதலைப் புலிகளாகிய நாம் இன்று உலகின் போராட்ட சக்திக ளில், ஒரு முதன்மையான சக்தி யாக இருக்கின்றோம். இந்த நிலை எமது மக்களின் வாழ்க்கையை முதன்மைப்படுத்தும், இதனைப் புரிந்துகொண்டு - இன்று ஒன்றாகி நிற்கின்ற கட்சிப் பிரதிநிதிகளும், தொழிலாளர் சங்கங்களும் எமது கிராமம் சார் அமைப்புக்களை சேர்ந்த மக்களும் - ஒன்றிணைந்து எதிர்வரும் நாட்களிலும் உறுதியோடு செயற் படுவதன் மூலம், எங்களுடைய உரிமையை பெற்றுக் கொள்ளமுடி யும். அந்த உரிமையைப் பெற்றுக் கொள்ளும்போதே தொழிலாளர்க ளது பிரச்சினையும் தீரும். எமது மக்களுடைய உரிமையும் இந்த மண்ணில் நிறைவு பெறும் என்றார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.